# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2031 கார்த்திகை19 திங்கட்கிழமை(04-12-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:08


## லண்டன் மாநகரில் உணர்வுபூர்வமாக மாவீரர் தினத்தை ஒட்டிய நிகழ்வுகள்

- லண்டனிலிருந்து உதயனின் விசேட செய்தியாளர் -

லண்டன்,டிசெ.4

மாவீரர் தினத்தையொட்டி லண்டன் அரோனா மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக இடம்பெற்றன.

நேற்றுமுன்தினம் லண்டன் நேரப்படி பிற்பகல் 3.40 மணிக்கு ஆரம்பமான நிகழ்வுகள் இரவு 11 மணிக்குப் பூர்த்தியாகின.

மாவீரர் இசைப்பிரியனின் தாயார் தமிழீழக் கொடியை ஏற்றிவைக்க நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

மங்கள விளக்கேற்றல் இடம்பெற்ற சமயம், நிகழ்வில் பங்குபற்றிய ஆயிரக்கணக்கானவர்களும் தீபம் தாங்கி இருந்தனர். மிகவும் உணர்வுபூர்வமாக இது அமைந்திருந்தது.

கொடியேற்றப் பாடல் மற்றும் நிகழ்வுகள் இடம்பெற்ற பின்னர் உரைகளும், கலை நிகழ்வுகளும் ஆரம்ப

(12ஆம் பக்கம் பார்க்க)

**அன்ரன் பாலசிங்கத்தின் உரையின் முதல் பகுதி 5ஆம் பக்கத்தில்**

## இன்று கப்பல் பயணம்

யாழ்ப்பாணம்,டிசெ.4

காங்கேசன்துறையிலிருந்து ஆயிரத்து 250 பயணிகளுடன் 'லங்கா முடித்த' கப்பல் திருகோணமலைக்கு இன்று புறப்பட இருப்பதாக யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சேவைக்கு பயணச்சீட்டுப் பெற்றும் பயணத்தை மேற்கொள்ள முடியாமல் போன 550 பேரையும்-

யாழ்.சிங்கள மகா வித்தியாலயத்தில் நேற்று பயணச் சீட்டுக் கொள்வனவு செய்த 250 பேரையும் -

பயண ஏற்பாடுகளுடன் இன்று காலை 7 மணிக்கு யாழ்.ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

பயணிகள் தமக்குத் தேவையான குடிதண்ணீர் மற்றும் மதிய உணவுவகைகளையும் எடுத்து வர வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கப்பலில் மின்சார உபகரணங்கள் எடுத்துச் செல்வது தடைசெய்யப்பட்டுள்ளது என்று சிவில் நிர்வாக அலுவலகம் கண்டிப்பான அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது. (உ-3)

# சமாதானத் திட்ட அட்டவணைக்கு இறுதி வடிவம் கொடுப்பதில் இழுபறி!

## இருதரப்பும் விடாப்பிடி நிலை

லண்டன்,டிசெம்பர்4

**ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான கடும் எதிர்ப்பு நிலையைத் தணித்து, மோதல் தவிர்ப்பு ஏற்பட வழி செய்யும் விதத்தில் நோர்வே தயாரித்துள்ள சமாதானத் திட்ட அட்டவணைக்கு இறுதி வடிவம் கொடுப்பதில் அரசு, புலிகள் ஆகிய இரு தரப்புக்குமிடையில் கடும் இழுபறி நிலை நிலவுவதாகத் தெரிகிறது. இரு தரப்புமே தங்கள் நிலைப்பாட்டிலிருந்து விட்டுக்கொடுக்காத - விடாப்பிடி - நிலையைப் பேணுவதால் சமாதானத் திட்ட அட்டவணையைத் தீர்மானிக்கும் விவகாரம் குழப்பத்தில் சிக்கியுள்ளது.**

இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்தி நிறுவனம் ஒன்று இத் தகவலை வெளியிட்டிருக்கின்றது. அந்நிறுவனம் வெளியிட்டுள்ள தகவல்கள் வருமாறு:-

இரு தரப்புக்கும் இடையில் எதிர்ப்புணர்வைத் தணித்து, மோதல் தவிர்ப்புக்கு வழிசெய்து, நேரடிப் பேச்சுக்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்தும் நோக்குடன் -

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இரு தரப்புடனும் பேசி, சமாதானத் திட்ட அட்டவணை ஒன்றைத் தயாரித்திருக்கின்றார்.

அந்தத் திட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களை ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் இரு தரப்பும் நிறைவேற்றுவதன் மூலமும் -

இரு தரப்புக்கும் இடையில் நம்பிக்கையை ஏற்படுத்தும் தொடர் நடவடிக்கைகளை இரு தரப்புமே பரஸ்பரம் மேற்கொள்வதன் மூலமும் -

அவை தமக்கிடையே யுத்தத்தைத் தணித்து, மோதல் தவிர்ப்புக்கு வழி செய்யலாம் என எரிக் சொல்ஹெய்ம் வரையறை செய்திருக்கின்றார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் அமைப்பைத் தடைசெய்யுமாறு பிரிட்டனைக் கோருகின்றார் சந்திரிகா

லண்டன்,டிசெ.4

பிரிட்டனில் விடுதலைப்புலிகள் அமைப்பைத் தடை செய்யவேண்டும் என்று அந்த நாட்டிடம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தியோகபூர்வமாகக் கோரியுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

நேற்றுமுன்தினம் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் றொபின் குக்குடன் தாம் நடத்திய நேரடிப் பேச்சுக்களின் போதே ஜனாதிபதி இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

இதற்குப் பதிலளித்த றொபின் குக், விடுதலைப் புலிகளைத் தடை செய்யக்கூடிய சூழ்நிலை இப்போது ஏற்படவில்லை என்று தெரிவித்ததாகவும் கூறப்படுகின்றது.

எனினும் பிரிட்டனில் ஜனவரியில் நடைமுறைக்குக் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ள பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழ் அந்த அமைப்பைத் தடை செய்யலாமா என்பதை ஆராயத் தாங்கள் தயாராகவிருப்பதாகவும் அவர் இலங்கை ஜனாதிபதியிடம் கூறியதாகத் தெரிகின்றது.

எனினும் அந்தத் தடைச் சட்டத்தின் கீழ் கூட, விடுதலைப்புலிகள் அமைப்பைத் தடை செய்யக்கூடிய வாய்ப்புக் குறைவாகவே இருக்கும் என்றும் அவர் ஜனாதிபதியிடம் கூறியதாகக் கூறப்படுகிறது. (உ-3)

## இவ்வாரம் ஒஸ்லோ செல்கிறார் சந்திரிகா

லண்டன், டிசெ.4

தற்சமயம் பாரிஸில் தங்கியுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்த வாரத்தில் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவுக்குச் செல்லவிருக்கின்றார்.

விடுதலைப்புலிகளுடன் தமது அரசு ஆரம்பிக்க உத்தேசித்துள்ள பேச்சுவார்த்தை குறித்து அவர் நோர்வே அரசு அதிகாரிகளுடன் பேச்சுக்களில் ஈடுபடுவார்.

இந்தப் பேச்சுக்களை முன்னெடுப்பதில் உள்ள தடைகள், முன்னேற்றங்கள் குறித்து அவர் விவரமாக ஆராய்வார் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## 20 தமிழர் கைது

கொழும்பு,டிசெ.4

கொழும்பு கோட்டை மற்றும் புறக்கோட்டை, கொம்பனித்தெரு பகுதிகளில் கடந்த இரு நாள்களாக பொலீஸாரும் இராணுவத்தினரும் இணைந்து நடத்திய தேடுதல் வேட்டையைத் தொடர்ந்து இருபது தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

## மற்றொருவர் உயிரிழப்பு

களுவாஞ்சிக்குடியில் நேற்று முன்தினம் பொலீஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த மற்றொரு சிவிலியன் நேற்று உயிரிழந்தார்.

வேல்முருகு ஸ்ரீதரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

இச் சம்பவத்தில் ஏற்கனவே இரண்டு பொதுமக்கள் உயிரிழந்தமை தெரிந்ததே. (உ-3-7)

## தொழில் நுட்ப மாணவன் இன்று நீதிமன்றில் ஆஜர்?

யாழ்ப்பாணம்,டிசெ.4

மந்துவிலில் வைத்துக் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறைத் தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ள யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மாணவன் இராசையா ஸ்ரீரங்கநாதன் இன்று யாழ்.நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தொழில்நுட்பக் கல்லூரிக்கு நேற்றுச் சென்ற யாழ்.மாவட்ட தமிழர் விடுதலைக்கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா இந்தத் தகவலை மாணவர் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

பிரஸ்தாப மாணவனின் விடுதலை தொடர்பாக யாழ்.பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியுடன் தாம் கலந்துரையாடியதாகவும் -

(12ஆம் பக்கம் பார்க்க)

வடமராட்சியில் வியாழனன்று

## கடத்தப்பட்ட மூன்று இளைஞர்களில் இருவர் மட்டும் சனியன்று விடுதலை

### மற்றையவர் குறித்துத் தகவல் இல்லை

யாழ்ப்பாணம், டிசெ.4

வடமராட்சிப்பகுதியில் கடந்த வியாழனன்று இனந்தெரியாத நபர்களினால் கடத்திச் செல்லப்பட்ட மூன்று இளைஞர்களில் இருவர் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டனர்.

அருமைத்துரை றொனால்ட் (வயது20), செல்வரட்ணம் அஜந்தன் (வயது18), தம்பிராசா ஆதவன் (வயது 23) ஆகிய மூன்று இளைஞர்களுமே கடத்தப்பட்டவர்களாவர்.

இவர்களில் அருமைத்துரை றொனால்ட், செல்வரட்ணம் அஜந்தன் ஆகிய இருவரும் நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் கண்கள் கட்டப்பட்ட நிலையில் பருத்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கண்டி நகரில் நேற்று ஐ.தே.க. ஆர்ப்பாட்டம்!

### சந்திரிகா, அனுருத்த கொடும்பாவிகள் எரிப்பு

கண்டி,டிசெ.4

விலைவாசி அதிகரிப்பைக் கண்டித்து ஐ.தே.கட்சி நேற்று நண்பகல் கண்டியில் பெரும் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியது.

அந்தக் கட்சியின் வாலிபர் சம்மேளனக் கூட்டம் கண்டியில் நேற்றுக்காலை ஆரம்பமாகி முடிவடைந்த பின்னர், இந்த ஆர்ப்பாட்டம் கண்டி போகம்பரையில் இருந்து மணிக்கூண்டுச் சந்திவரை நடத்தப்பட்டது.

சுமார் 10 ஆயிரம் பேர் கலந்துகொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தின் முடிவில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த ஆகியோரின் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன.

இந்த ஆர்ப்பாட்டக்காரர் மத்தியில் பேசிய ரணில் விக்கிரமசிங்க அங்கு கூறியதாவது:-

ஜனவரி முதல் அரச ஊழியர்களுக்கு 2 ஆயிரம் ரூபா சம்பள உயர்வும் ஓய்வூதியர்களுக்கு 600 ரூபா உயர்வும் வழங்கவேண்டும். நெல்லை கிலோ 13ரூபா 50சதத்துக்கு கொள்வனவு செய்யவேண்டும்.

இந்த மூன்று விடயங்களையும் அரசு அமுல் செய்யத் தவறினால் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்துவோம் - என்றார்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மனநலம் பாதிக்கப்பட்டோரை ஆற்றுப்படுத்த 3 ஆண்டுத் திட்டம்

## சேவ லங்கா அமைப்பு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.4

யாழ்.குடாநாட்டில் இடம்பெறும் யுத்தம் மற்றும் இடம்பெயர்வுகளினால் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களை ஆற்றுப்படுத்தும் வகையில் சேவ லங்கா பவுண்டேசன் அமைப்பினால் மூன்றாண்டுத் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தினை அமுல் செய்யும் நோக்குடன் சேவலங்கா அமைப்பின் கொழும்பு தலைமைச் செயலகத்தில் இருந்து நான்கு பேரடங்கிய குழு ஒன்று கடந்த வாரம் யாழ்ப்பாணம் விஜயம் செய்துள்ளது.

சேவலங்காவின் விசேட திட்டப் பணிப்பாளர் லக்கி எஸ்.அபயசேகர மற்றும் அனுசா பொன்சேகா, அடிவஸ்ரனா, இவான்டி புறுயின் ஆகிய நால்வருமே யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ளனர்.

இக்குழுவினர் யாழ்.பல்கலைக் கழக மருத்துவபீட பேராசிரியர் தயா சோமசுந்தரம், யாழ்.அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் உட்பட பலரைச் சந்தித்து மேற்படி விடயம் தொடர்பாக கலந்துரையாடியுள்ளனர்.

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகத்திற்கும் இவர்கள் விஜயம் செய்து யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலைமை தொடர்பாகக் கேட்டறிந்து கொண்டனர்.

யுத்தம் மற்றும் இடப்பெயர்வுகளினால் யாழ்ப்பாண மக்கள் படும் அவலங்களை இணையப் பிரதிநிதிகள் இந்தக் குழவினருக்கு விளக்கிக் கூறினார்கள்.

தமது திட்டம் தொடர்பாக விளக்கிக் கூறிய சேவலங்கா அமைப்பினர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்த பின்னர் இத்தகைய ஒரு திட்டம் அவசியம் என்பதை உணரக்கூடியதாகவுள்ளது என்று தெரிவித்தனர்.

கொழும்பு திரும்பியுள்ள மேற்படி அமைப்பினர் மீண்டும் அடுத்த பெப்ரவரி மாதத்தில் யாழ்ப்பாணம் வர இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-5-10)

### கப்பல் சேவையை எதிர்பார்த்து

# 2 ஆயிரத்து 500 பயணிகள் திருமலையில் காத்திருப்பு!

திருகோணமலை,டிசெ.4

கப்பல் மூலம் யாழ்ப்பாணம் செல்வதற்காக சுமார் 2 ஆயிரத்து 500 பேர் கடந்த சில வாரங்களாக திருகோணமலையில் தவம் கிடப்பதாக திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலர் வி.வேலும்மயிலும் உதயனுக்குத் தெரிவித்தார்.

பயண விண்ணப்பங்களைச் சமர்பித்தவர்களில் 400 பேருக்கு கடற்படையினரால் நடத்தப்படும் நேர்முகப் பரீட்சைகள் முடிவடைந்து விட்டன.

இந்த 400 பேருக்கும் நேற்று ரிக்கெட் வழங்கப்பட இருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

ஏனையோருக்கான நேர்முகப் பரீட்சைகள் இன்று திங்கட்கிழமை நடத்தப்படும் எனவும் பிரதேச செயலர் தெரிவித்தார்.

திருமலையில் தங்கியுள்ள யாழ் பயணிகள் பலரும் தங்குமிட வசதியின்றி பெரும் அவஸ்தைப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலைக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் பயணிகள் சேவையில் ஈடுபட்ட 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பலின் சேவை கடந்த சில வாரங்களாக இடைநிறுத்தப்பட்டிருப்பது தெரிந்ததே. (ஐ-7)

## பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.4

பண மோசடி தொடர்பாக யாழ். நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணம் பிரதான வீதியைச் சேர்ந்த பாவிலுப்பிள்ளை தேவதாசன் என்பவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

25 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும் 2 லட்சம் ரூபா பெறுமதியான 2 ஆள் பிணையிலும் செல்ல அனுமதிக்கப்பட்ட இவர் நீதிமன்ற அனுமதியின்றி குடாநாட்டை விட்டு வெளியேறக் கூடாது என்ற நிபந்தனையுடன் விடுவிக்கப்பட்டார். (ஐ-5)

# பிரபாவின் மாவீரர் தின உரைக்கு இந்து சமயப் பேரவை வரவேற்பு

யாழ்ப்பாணம்,டிசெ4

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மாவீரர் தின உரையின் போது சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான தமது நல்லெண்ணத்தை வெளியிட்டிருப்பது தமிழினம் என்றும் அமைதியான வாழ்வையே விரும்புகிறது என்பதை தெளிவுபடுத்துகிறது.

இவ்வாறு யாழ்.மாவட்ட இந்து சமயப் பேரவையினால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'சமாதானப் பேச்சுக்கான நல்ல சூழ்நிலையைப் பயன்படுத்த உதவுங்கள்' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள அச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தலைவர் வே.பிரபாகரனின் கருத்தை இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், நோர்வே ஆகிய நாடுகள் வரவேற்றிருப்பது எம் நாட்டில் சமாதானம் ஏற்படுத்துவதற்கான நல்ல சூழ்நிலையை தெளிவுபடுத்தியுள்ளது.

எமது நாடு மிகுந்த சோதனையைச் சந்தித்துள்ள இந்த வேளையில் இலங்கை அரசும் பிரதான எதிர்க்கட்சியும் சமாதானத்தை ஏற்படுத்த புலிகளுடன் பேச வேண்டும் என்று ஏக காலத்தில் கருத்து தெரிவித்திருப்பது ஓர் நல்ல அறிகுறியாகும்.

இந்த நிலையில் இனவிரோதக் கட்சிகள் சில பிரபாகரனின் உரைக்கு கண்டனம் தெரிவித்திருப்பது மனவேதனைக்குரிய விடயமாகும். இந்தக் கட்சிகளுக்கு உண்மையில் நாட்டின் மீதோ அல்லது சிங்கள தமிழ் மக்கள் மீதோ அக்கறை இல்லை என்பதை இவர்களது கருத்துக்கள் நிரூபித்துள்ளன.

நடைபெறும் இந்தப் போரால் தமிழ் மக்களின் சொத்துக்கள் அழிக்கப்படுவதோடு தமிழ், சிங்கள மக்களும் பெருமளவில் அழிகிறார்கள் என்பதை இவர்கள் மறந்து விடுகிறார்கள்

தமிழ் மக்களின் நலனில் இவர்கள் அக்கறை கொள்ளாது போனாலும் சிங்கள மக்களின் நலனிலாவது அக்கறை கொள்ள வேண்டும்.

தற்போது நடைபெறும் யுத்தம் தொடருமானால் பௌத்த மதமும் இந்துமதமும் இந்த நாட்டில் முழுமையாக அழிந்துவிடும் என்பதை அறிந்து தியாகத்துடன் அனை[illegible] செயற்படுவோமாக. இப்படி அ[illegible] செய்திக் குறிப்பில் தெரிவி[illegible] பட்டுள்ளது.

## இருவருக்கு அபராதம்

வலி.வடக்கு,டிசெ.4

சட்டவிரோதமான முறையில் கசிப்பு கொண்டு செல்லும் போது கைது செய்யப்பட்ட இருவருக்கு தலா 15 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சுன்னாகம் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம்மாவட்ட நீதிபதி பா.சுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட இவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதை தொடர்ந்து இத்தண்டனை விதிக்கப்பட்டது. (ஐ-86)

### பிரபாவை நாடு கடத்தும் விவகாரம்:

# இந்தியாவின் அறிவிப்புக்கு சந்திரசேகரன் கண்டனம்!

## வாஜ்பாய்க்கு அவசர கடிதம்

கொழும்பு,டிசெ.4

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை நாடு கடத்தும் விவகாரத்தில் இந்திய அரசு இன்னமும் உறுதியாக இருப்பதாக இந்திய உள்துறை அமைச்சர் நாடாளுமன்றத்தில் அறிவித்திருப்பதாக வெளியான செய்தி தமக்கு அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தி உள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பெ. சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கு அவர் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் சர்வதேச அழுத்தங்கள் தற்போது அதிகரித்த வண்ணம் உள்ளன.புலிகள் நிபந்தனையற்ற பேச்சுக்கு முன்வந்திருப்பது சகல மக்களிடமும் நம்பிக்கையையும் வரவேற்பையும் பெற்றுள்ளது.

இந்த நேரத்தில் பிரபாகரனை நாடு கடத்தவேண்டுமென்று இந்திய அரசு உறுதி கொண்டிருப்பதாக வெளிவந்துள்ள செய்திகள் அதிர்ச்சி அளிக்கின்றன.

இந்த நடவடிக்கை இலங்கையில் சிறுபான்மை மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவதையும், நாட்டில் சமாதானம் ஏற்படுவதையும் காலதாமதம் ஆக்கிவிடும் என்ற அச்சம் எழுந்துள்ளது.

இலங்கை மக்களின் எதிர்காலத்தையும், அரசியல் நலனையும் கருத்தில் கொண்டும் இலங்கை மக்கள் நலனில் இந்தியாவுக்குள்ள நல்லெண்ணத்தை உறுதிசெய்யும் விதத்திலும் பிரபாகரனை நாடு கடத்தவேண்டுமென்ற தீர்மானத்தை இந்திய அரசு கைவிட வேண்டும் என்று கோருகின்றோம்.

அதேவேளை - இலங்கை மீதும் மக்கள் மீதும் இந்தியாவுக்குள்ள நல்லெண்ணத்தை உறுதி செய்யும் விதத்தில் இந்தியா சமாதான தீர்வுத்திட்ட முயற்சிகளுக்கு தனது பங்களிப்பை முழுமையாக வழங்க வேண்டும் - என்று அக்கடிதத்தில் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.(ஐ-ம)

# மரண அறிவித்தல்கள்

## விஸ்வலிங்கம் இராசரத்தினம் - (கே.வி)

(இளைப்பாறிய களஞ்சியக்காப்பாளர், பலாலி விமான நிலையம்)

நாச்சிமார்கோயிலடியைப் பிறப்பிடமாகவும் தற்போது சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் இராசரத்தினம் நேற்று (03-12-2000) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற திருமதி கனகரத்தினம் தையல்நாயகி (தெஹிவளை) அவர்களின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற இரத்தினம்மாவின் அன்புக் கணவரும், சுரேந்திரரத்தினம், விஜேந்திரரத்தினம், நாகேஸ்வரி, சந்திரலேகா, ரவீந்திரரத்தினம், (சிறு கைத்தொழில் அபிவிருத்திச்சபை, யாழ்ப்பாணம்), புஸ்பராணி, பாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2000) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

*பிளாக் வீதி,*
*சங்கானை.* (81222)

தகவல்:-
பிள்ளைகள்.

## சின்னையா பூவிலிங்கம்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், நயினாதீவையும் அரியாலையையும் வசிப்பிடமாகக் கொண்டவருமான சின்னையா பூவிலிங்கம் 02-12-2000 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - பூமாலட்சுமி தம்பதிகளின் மருமகனும் நாகம்மாவின் அன்புக்கணவரும், ஐயாத்துரை (புத்தளம்), காலஞ்சென்ற கந்தையா மற்றும் சோமசுந்தரம், இராசேந்திரம், (கொழும்பு), காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், தருமலிங்கம் மற்றும் மாக்கிரட் (பூமணி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் புவனேஸ்வரியின் (சின்னக்கிளி) மைத்துனரும் சந்திரகுமார், காலஞ்சென்ற சந்திரமலர் மற்றும் விஜயகுமாரி (கிளிநொச்சி), கிருபாகரன் (கிளிநொச்சி), கிருபாநிதி, கலாநிதி (கண்டி), விஜயகரன் (கிளிநொச்சி), தயாநிதி, சதீஸ்குமார்(யா. கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சீவரத்தினம், விக்னேஸ்வரி, ரவிச்சந்திரன், விஜயா, மரியஜெயசீலன், குணசேகரர், பத்மாவதி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (04-12-2000) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.மரியன்னை பேராலயத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக யாழ்.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*23, சுவாட்ஸ் லேன்*
*கச்சேரியடி,*
*யாழ்ப்பாணம்.* (81217)

தகவல்:-
பூ.சந்திரகுமார் (மகன்)
சுங்கத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

## சின்னக்குட்டி தியாகராஜா

(இளைப்பாறிய ஓவசியர் - யாழ்.மாநகர சபை)

ஈச்சமோட்டையை பிறப்பிடமாகவும், தற்போது நவாலியில் வசித்தவருமாகிய சின்னக்குட்டி தியாகராஜா அவர்கள் நேற்று (03-12-2000) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சீதப்பிள்ளையின் அன்புக் கணவரும், அருணாசலம் (கனடா), கமலாம்பிகை (லீலா- கனடா), சிதம்பரநாதன் (தெய்வேந்திரன்), தில்லைநாயகி (இந்திரா - ஜேர்மனி), சிவானந்தன் (கனடா), பாலச்சந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04-12-2000) திங்கட்கிழமை 1.00 மணியளவில் தற்போதைய இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்துக்கட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கலைஅரசி வீதி,*
*நவாலி தெற்கு ,*
*நவாலி.* (81225)

தகவல்
சிதம்பரநாதன்
(தெய்வேந்திரன் - மகன்)


**SCIENCE CENTRE**
PointPedro
மீட்டல் வகுப்பு

Che. - மணியம்
Phy. - குமுக்கேசன
Bio. - தற்பரன்
கெங்காதரன்
Com. - Maths-
பிரபல ஆசிரியர்
ஆரம்பம் – 06.12.2K
9.00 a.m.
(81223)

**Jaffna Medical Center Vembady**
(வேம்படி பாடசாலை முன்பாக)

- வெளிநோயாளர் பகுதி
- உள்ளக நோயாளர் பகுதி
- வைத்திய நிபுணர் ஆலோசனைப் பகுதி
- ஆய்வுகூட, E.C.G. வசதி -
- மருந்தகம்

வைத்திய நிபுணர் ஆலோசனைப் பகுதிக்கான முன் பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
- நிர்வாகி
(81221)

**பாராட்டி வாழ்த்துகிறோம்**

2000 ஆம் ஆண்டு தரம் 5 இல் புலமைப்பரிசில் பரீட்சையில் பிரத்தியேகமாகக் கல்வி கற்பித்த
செல்வி நவசிவாயம் சுமதி
அவர்களையும் அவரிடம் பயின்று சித்திபெற்ற பின்வரும் ஆறு மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

| | | | |
|---|---|---|---|
| தே.செந்தாரன் | ~ 146 | ம.சாம்பவி | ~ 141 |
| சே.கமலவாகினி | ~ 144 | தி.சேந்தன் | ~ 141 |
| ஆ.வளர்மதி | ~ 143 | க.திவாகரன் | ~ 136 |

காரை. மத்தி
சிறுவர் உரிமைகள் பாதுகாப்புக் குழு,
காரைநகர்.
(C/14130)

**A/L - 2001 DAY CLASS**
நாடகமும் அரங்கியலும்
க.கந்தவேள்
இந்து நாகரிகம்
S.சோதி
ஆரம்பம்:
06.12.2000
ஸ்ரீகாந் கல்வி நிலையம்,
இணுவில். (81218)

# உதயன்

## பிரதமர் கோடிடுவது...

நிபந்தனை எதுவும் இல்லாத முறையில் விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு அரசாங்கமும் தயாராக இருப்பதாகப் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா தெரிவித்திருக்கிறார். கொழும்பில் இருந்து வெளிவரும்தமிழ்ப்பத்திரிகைகளுக்கு அளித்த செவ்வியில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தாம் நிபந்தனை எதனையும் விதிக்கவில்லை என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் தமது மாவீரர் தின உரையில் தெளிவுபடுத்தி இருந்தார்.

அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே பிரதமரின் இந்த அறிவிப்பு அமைவதாகக் கொள்ளலாம்.

ஆனால் இந்தப் பிரச்சினைக்கு போர் மூலம் தீர்வு காணவேண்டும் என்பதே தமதும் ஜனாதிபதியினதும் விருப்பம் என்று அவர் கூறியிருக்கிறார். இது விடயத்தில் அரசுக்கோ, தமக்கோ, ஜனாதிபதிக்கோ மாறுபட்ட கருத்து எதுவும் இல்லை எனவும் பிரதமர்அழுத்திக் கூறியுள்ளார்.

பிரதமரின் இந்தக் கூற்று சமாதானப் பேச்சுக்களை குழப்பும் தொனியில் அமைந்துள்ளதாகவே தோன்றுகிறது. விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்துவதை அரசு வெறும் நாடகமாகக் கொள்கிறதோ அல்லது விளையாட்டாகக் கொள்கிறதோ என்று சந்தேகப்பட வைக்கிறது.

ஜனாதிபதி லண்டனில் பிரிட்டிஷ் பிரதமர் பிளேயரை உத்தியோகப் பற்றற்ற முறையில் கடந்த வாரம் சந்தித்துப் பேசுகையில்,இலங்கையின் உள்நாட்டுப் போருக்கு விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தி சமாதானத்தீர்வு காணவே அரசு விரும்புகிறது எனக் கூறியிருந்தார்.

அதன் பின்னரும் இப்பிரச்சினைக்கு போரின் மூலம் தீர்வு காண்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடு, ஜனாதிபதியின் நிலைப்பாடு என்று பிரதமர் கூறுவது—

அரச தரப்பு சமாதானப் பேச்சுக்கு தயார் என்று சொல்வது, அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபாடு உள்ளதாகக் காட்டுவது எல்லாம் வெறும் கண்துடைப்புத்தானோ என எண்ண வைக்கிறது.

நிதி இல்லை என்பதற்காக அரசு போரை நிறுத்த முடியாது. விடுதலைப் புலிகள் கைவிடும் வரை — நிறுத்தும் வரை— அந்த நிலைக்கு அவர்களைத் தள்ளும் வரை போர் தொடரும் என்பது பிரதமரின் நிலைப்பாடு.

போரில் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்தாலேயே அரசியல் தீர்வு என்ற பெயரில் தமிழர்கள் மீது தான் நினைத்ததைத் திணிக்கலாம் என்ற உள்நோக்கத்தை அரசாங்கம் இன்னும் மாற்றிக் கொள்ளவில்லை. பிரதமரின் கூற்றுக்கள் அதனையே உணர்த்துகின்றன.

1995 ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகளுடன் பேசும் போதும் சிறுபிள்ளை விளையாட்டாகவே அரசு அதனைக் கருதிச் செயற்பட்டது. இம்முறையும் அதே பாணியிலேயே செயற்படும் என்பதனைப் பிரதமரின் கூற்றுக்கள் எதிர்வு கூறுகின்றனவா?

அப்போது, சந்திரிகா தனது சொந்த எண்ணப்படி நடந்து கொள்ள முடிந்தது! ஆனால் இம்முறை பிரதமர் ரத்னசிறி இனப்பிரச்சினை விவகாரத்தில் எல்லாச் சந்திகளிலும் குறுக்கே நிற்பார் என்பதனை அவரது கருத்துக்கள் கோடிட்டுக் காட்டுகின்றன.

# தேசிய நீர்வழங்கல், வடிகாலமைப்புச் சபையின்
# யாழ். பிராந்திய அலுவலகத்தை மூடிவிட முயற்சி

நல்லூர், டிசெ. 4

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ். பிராந்திய அலுவலகத்தை மூடுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த முயற்சியைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று அந்த அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்கள் கோரியுள்ளனர்.

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு—கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அவர்கள் அனுப்பியுள்ள மகஜர் ஒன்றிலேயே இந்தக் கோரிக்கையை அவர்கள் விடுத்துள்ளனர்.

## ஆட்சேபித்து அமைச்சர் டக்ளஸுக்கு மகஜர்

இது தொடர்பாக ஊழியர்கள் அவருக்கு அனுப்பியுள்ள மகஜரில் கூறப்பட்டிருப்பதாவது:-

★ யாழ். குடாநாட்டில் புதிதாகப் பல குடிதண்ணீர் விநியோகத் திட்டங்களை நிர்மாணிக்க பிரதேச சபைகளாலும் பொது அமைப்புகளாலும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கான நிதியினைப் பெறுவதற்கு தங்களின் அமைப்பு முயற்சி எடுப்பதையும் நாங்கள் நன்கு அறிவோம்.

★ 1995 ஆம் ஆண்டு முதல் யாழ். பிராந்தியத்தின் இடமாற்றம், ஓய்வு பெறுதல் காரணமாக ஏற்பட்டுள்ள வெற்றிடங்கள் பல இன்னமும் நிரப்பப்படாமலேயே இருந்து வருகின்றன. இந்த நிலையில் இங்குள்ள ஊழியர்களை சுய விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்ப இடமாற்றம் செய்து, ஆள்களைக் குறைப்பதுடன் காரியாலயத்தை மூடவும் முயற்சிக்கப்படுகின்றது.

★ 1995 ஆம் ஆண்டுமுதல் தகுந்த உயரதிகாரி இன்மையால் அபிவிருத்திப் பணிகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. குறிப்பாக யாழ். பிராந்தியத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி பயன்படுத்தப்படாமல் வேறு பிராந்தியங்களுக்கு மாற்றப்பட்ட சம்பவங்களும் உண்டு.

★ இத்தகைய முயற்சி பல வருடங்களாக — 1995 ஆம் ஆண்டு முதல் — திட்டமிடப்பட்டு, பிராந்திய அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் இடம்பெற்றுவருகின்றது என்பதைத் தங்களுக்கு ஏற்கனவே தெரியப்படுத்தியிருந்தோம்.

★ பல குறைகளுடன் இயங்கும் எமது பிராந்திய காரியாலயத்தை மூடிவிடுவதனால் ஊழியர்கள் மட்டுமன்றி இங்குள்ள அபிவிருத்திப்பணிகளும் பாதிப்படையும் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-111]

## தொடர்ந்து விளக்கமறியல்

நெல்லியடி, டிசெ. 4

குடும்பஸ்தர் ஒருவர் மர்மமான முறையில் மரணமான சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த அவரது மனைவியை மீண்டும் இருவார காலம் விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் உத்தரவிட்டார்.

இரு மாதங்களுக்கு முன், துன்னாலை தாமரைக் குளத்தடிப்பகுதியில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் சாவகச்சேரியைச் சேர்ந்த க. யோகநாதன் (வயது 37) என்பவரே மரணமடைந்திருந்தார்.

இது சம்பந்தமாக நெல்லியடி பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த அவரது மனைவியான யோகநாதன் ஜெயந்தி (வயது 35) என்பவரை, சிறைச்சாலை அதிகாரிகள் கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்த சமயம் குறித்த சந்தேக நபரை, இம்மாதம் 15ஆம் திகதிவரைதொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு மாவட்ட நீதிவான் உத்தரவிட்டார்.

(உ-109)

## சட்டமா அதிபரின் பணிப்பு; கொடிகாமம் வாசி விடுதலை

நெல்லியடி, டிசெ. 4

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த தென்மராட்சி இளைஞர் ஒருவர் சட்டமா அதிபரின் பணிப்புரையை அடுத்து பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கட்டை பறிச்சான் வீதி கொடிகாமத்தைச் சேர்ந்த கந்தசாமி சிவராசா (வயது 22)என்ற இளைஞரே கடந்த மாதம் 17 ஆம் திகதி கொடிகாமம் பகுதியில் வைத்து பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இவரது வழக்குவிசாரணை கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் மாவட்ட நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் முன்னிலையில் நடைபெற்ற சமயம், காங்கேசன்துறை பொலீஸ் நிலைய பொலீஸ் பரிசோதகர் தயாவன்ச பிரசன்னமாகி, சட்டமா அதிபரின் அறிக்கையை சமர்ப்பித்ததை அடுத்து, நீதிவான் குறித்த சந்தேக நபரை விடுதலைசெய்தார்.

(ஐ-109)

## கரை ஒதுங்கிய டொல்பின் மீன்கள்

வேலணை, டிசெ. 4

வேலணை துறையூர் கடற்கரையில் நேற்று இரு டொல்பின் மீன்கள் இறந்த நிலையில் கரை ஒதுங்கின.

ஒரு மீன் 5 அடி நீளமும் சுமார் 50 கிலோ நிறையும் உடையது. மற்றைய மீன் மூன்றரை அடி நீளமும்சுமார் 35கிலோ நிறையும்உடையது.

இந்த மீன்களை ஏராளமானவர்கள் பார்வையிட்டனர். (உ-3-165)

## வெளிநாட்டுத் தூதர்கள் பலருக்கு இடமாற்றம்

கொழும்பு. டிசெ. 4

வெளிநாட்டுத் தூதுவர்கள் பதவியில் பல இடமாற்றங்கள் இடம்பெறவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதன்படி தற்போது வெளிவிவகார அமைச்சின் செயலாளராகப் பணிபுரியும் லயனல் பெர்னாண்டோ நெதர்லாந்துக்கும்—

முன்னாள் எம்.பி சுசில் முனசிங்க ஈராக்குக்கும்—

தற்போது தேசியப் பட்டியல் மூலம் எம்.பி.யாகியுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதியும் முன்னாள் இலங்கை நிர்வாக சேவை அதிகாரியுமான கே. மாரிமுத்து ஜேர்தாலுக்கும்—

வெளிநாட்டுத் தூதுவர்களாக நியமனம் செய்யப்படுவதுபெரும்பாலும் உறுதியாகிவிட்டது.

அதேவேளை—

தற்போது புதுடில்லியில் பிரதி உயர் ஸ்தானிகராகக் கடமைபுரியும் பிரசாத் காரியவாசம் ஜெனீவாவுக்கும் —

வாஷிங்டனில் உள்ள இலங்கையின் வெளிநாட்டுத் தூதரகத்தில் கடமைபுரியும் சிதா டி. சில்வா கனடாவுக்கும் —

ஜெனீவாவில் உள்ள தூதுவர் எம். ஜி. எஸ். பாலிககார தாய்லாந்துக்கும் —

தற்போது தாய்லாந்தில் உள்ள தூதுவர் திலகரட்ண அபூனுகம போர்த்துக்கலுக்கும்—

இடம் மாற்றம் பெறுவர் என அறியவருகின்றது.

தூதுவர்களை நியமனம் செய்வது தொடர்பான ஆட்சேபனைகளை விசாரிக்கும்— சகல கட்சிப் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் உபகுழு நாளை செவ்வாய்க்கிழமை இது தொடர்பாகக் கூடி ஆராயவுள்ளது

(உ-7)

## கத்தியைக் காட்டிச் சைக்கிளைப் பறிக்க முயன்றவர் கைது!

நெல்லியடி, டிசெ. 4

பட்டப்பகல்வேளை, வீதியில் வைத்து கத்தியைக் காட்டி சைக்கிள் ஒன்றை அபகரித்துச் சென்றதாகக் கூறப்படும் இளைஞர் ஒருவரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் உத்தரவிட்டார்.

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த இராஜசிங்கம் - குணசீலன் என்பவருக்குச் சொந்தமான 4 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான சைக்கிளை கடந்த 25 ஆம் திகதி அல்வாய் நாவலடிப் பகுதியில் வைத்து கத்தியைக் காட்டிப் பயமுறுத்தி அபகரித்த குற்றச்சாட்டில் பருத்தித்துறை பொலீஸாரினால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட — தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்து கொற்றாவத்தைப்பகுதியில் வசித்துவரும் - அப்துல் அசீஸ் — அக்மால் (வயது 28) என்பவர் கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டிருந்தார்.

(ஐ-109)

## தொலைபேசி விவரக்கொத்து குடாநாட்டில் விநியோகம்

மாகாண தொலைபேசி விவரக்கொத்து(2000-2001) யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்துள்ளது.

இந்த விவரக்கொத்து இலவசமாக சகல வாடிக்கையாளர்களுக்கும் வழங்கப்பட இருப்பதாக ரெலிக்கொம் நிறுவன பிராந்திய முகாமையாளர் அன்ரன்ராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாண வாடிக்கையாளர்கள் இன்று யாழ். அலுவலகத்திலும்—

வடமராட்சி வாடிக்கையாளர்கள் நாளை வடமராட்சி அலுவலகத்திலும் —

அதனைப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விவரக்கொத்தைப் பெற வரும்போது செப்ரெம்பர் மாதத்துக்கான கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டை எடுத்துவருமாறு கேட்கப்பட்டுள்ளது.

[உ-3]


## நாளை

கார்த்திகை 20
செவ்வாய்க்கிழமை
திதி: நவமி
முன் இரவு 7. 52 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி
முற்பகல் 11.32 வரை
சுபநேரம்: 10. 47-12.17
ராகுகாலம்: 3.17- 4.47
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)


### உதயவாக்கு

தன் தகுதிக்கு மேல் அதிகம் செலவு செய்பவன் தன் கழுத்தில் மாட்டக் கயிறு திரிக்கின்றான்.

-பிரான்ஸ் பழமொழி-

## ஆசிரியருக்கு

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்களின் விவரங்கள் வடக்கு—கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு கோரியுள்ளதால் இடம்பெயர்வுக்கு முன்னர் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களாக கடமையாற்றியோர் தாம் கடமையாற்றிய பாடசாலை அதிபருடன் தொடர்பு கொண்டு டிசம்பர் ஐந்தாம் திகதிக்கு முன்னர் விவரங்களைத் தெரிவிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர், செல்வராசா கேட்டுள்ளார். (உ-117)

## மீட்டல் வகுப்பு

யாழ்ப்பாணம், டிசெ 4

தென்மராட்சிகல்வி வலயப் பாடசாலைகளில்இவ்வாண்டு ஜி.சி.ஈ. சாதாரணதர உயர் கல்விப் பாடத்துக்குத் தோற்றும் மாணவர்களுக்கு மீட்டல் வகுப்புகள் நடைபெறவுள்ளன.

நாளை 5 ஆம் திகதி கொண்டாவில் திரு கல்வி நிலையத்தில் இயங்கும் டிறிபேக் கல்லூரியிலும்—

6 ஆம் திகதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இயங்கும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும்—

காலை 9 மணிக்கு இந்த வகுப்புகள் ஆரம்பமாகும்.

(உ-5)

# நீரிழிவு விழிப்பு மாதத்தை ஒட்டி லயன்ஸ் கழகச் சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம், டிசெ. 4

நல்லூர் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் கடந்த மாதம் 26 ஆம் திகதி பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தில் நடத்தப்பட்ட இலவச மருத்துவ முகாமில் நூற்றுக்கு மேற்பட்டோருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

நீரிழிவு விழிப்புணர்வு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட இந்த மருத்துவ முகாமில் 160 பேருக்கு கண் பரிசோதனையும், 140 பேருக்கு நீரிழிவுப் பரிசோதனையும், 61 பேருக்கு பொது மருத்துவப் பரிசோதனையும் நடத்தப்பட்டது. 75 பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

நீரிழிவு நோய் விழிப்புணர்வு மாவட்டத் தலைவர் லயன் எஸ் எஸ். அருளானந்தம் தலைமையில் நடைபெற்ற இந்த முகாமில் யாழ். ஆஸ்பத்திரி வைத்திய நிபுணர் டாக்டர் எஸ். லோகநாதனின் மேற்பார்வையில் மருத்துவ பீடத்தின் 18 ஆம் அணியைச் சேர்ந்த மாணவர்கள் சிகிச்சை அளித்தனர்.

நீரிழிவு நோய் தொடர்பாகவும், அதை அறிந்து கொள்ளும் இலகுவான பரிசோதனை முறைகள் பற்றியும் இந்த முகாமில் கலந்து கொண்டோருக்கு விளக்கமளிக்கப்பட்டது. (ஐ—111)

# ஓராண்டு நினைவஞ்சலி



## திருமதி தேவராணி சுந்தரலிங்கம்

தோற்றம் 09—02—1940 மறைவு 15—12—1999

திதி: 04-12—2000

மனத்தடங்கண்
மருவி நின்ற கலை மங்கை நல்லாள்

விளங்கொளியனைய வியத்தகுபேறாய் இல்லம் சிறக்க இன்முகத்தோடு என்றுமென் துணையாய் இடர் களைந்திட்ட தெய்வப் பெண்ணே! உனை அடைந்திட்ட பேறால் ஊக்கமும் உழைப்பும் உயர்வும் புகழும் தான் வளர்ந்தனவே. தக்கோன் யாமென மிடுக்குடன் மிளிர மெச்சத் தகுந்த எச்சங்களாக ஆசைக்கொன்றும் ஆஸ்திக்கொன்றுமாய் பத்துத் திங்கள் பரிவொடு பயந்து இருவரைப் பாரினில் வளர்த்தீர்.

உச்சப்பேறாம் உன்மகன் மருத்துவக் கலாநிதி. மருவிய மகனோ அத்துறை மேவி நற்றா ஊற்றென மெய் நோய் போக்கவும அறிவுப்பசியை பல்கலை மாணவர் போக்கவும் புவியிடைப் பெற்றேம். அன்புக்கனியெம் சுபாஷினியும் அன்னாள் மருவிய இறைநுகர் சைவச்சூழலில் மலர்ந்த செல்வ விநாயகனும் செல்வப் பேறாம் அஜித் மதலையும் மங்காப் புகழொடு முயற்சித் திருவினை கைகூட்ட 'பொட்ஸ்வானா'வில் பொலிவுடன் திகழ்வது எம்தவ முதலே!

செந்தமிழும் சிவமணமும் செறிந்து வாழ இசை நலமும் இளைநதுகாலும் இனுவையம் பதியின் இனிய நற்பேறே! திருவேணி சங்கமத்தில் கலந்துய்க்க கடமை கொண்டேன். காசியில் ஆன்ம ஈடேற்ற ஆற்றுப்படுத்தல் பிதிர்க்கடன் புரிந்தேன். என்கடன் அதுவென நின்போகாத் துணைநலத்தால் உணர்ந்தேன். ஆத்ம பலமும் அறிவுடையோர் தேட்டமும் அகல் விளக்கென யான் விளங்கும் கீர்த்தியும் பல்கலைக்கழகப் பேரவைப் பணியும் உங்கள் உளப்பாங்கால் உயர்ந்த உயர்வே!

செந்நீர் நல்கி செகம் புரந்திட்ட சேயர்கள் இருவரின் சிந்தைகலா சீராட்டியே! என் அடிமனத்தென்றும் நிலவும் ஆனந்த வெள்ளமே! மறத்தற்கரிய மாமருந்தே! அரனடி நீழலில் அமைதி கொள்வாயே!

உழுவலன் பின் கல்விப்புலத்து
இரா. சுந்தரலிங்கமும், சேய்களும்,
செழுங்கிளைக் கேண்மையும்.

(சி/14087)

# நன்றித் திருப்பலி

யாழ்ப்பாணம், டிசெ. 4

மிருசுவில் புனித நிக்கொலஸ் ஆலயத் திருநாளை முன்னிட்டு இடம்பெயர்ந்து சில்லாலையில் வாழும் மிருசுவில் மக்களால் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 7.30 மணிக்கு சில்லாலை கதிரைமாதா ஆலயத்தில் நன்றித்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. (ஐ-30)

# கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிப்பு

வடமராட்சி, டிசெ 4

கரணவாய்ப் பகுதியில் கட்டாக்காலி நாய்கள் அண்மையில் நஞ்சூட்டி அழிக்கப்பட்டன.

கட்டாக்காலி நாய்களின் தொல்லைகளை அடுத்து இப்பகுதியில் கட்டாக்காலி நாய்களை நஞ்சூட்டி அழிக்க எடுத்த நடவடிக்கையின் போது 15 கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்பட்டன. (ஐ-173)

# ஈக்களை அழிக்க மருந்து தெளிப்பு

வடமராட்சி, டிசெ 4

வடமராட்சிப் பகுதியில் உள்ள இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் ஈக்கள் மொய்ப்பதைத் தடுப்பதற்கு தடுப்பு மருந்து தெளிக்கப்பட்டு வருகின்றது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவால் வழங்கப்பட்ட 'எல்சான்' என்ற இத்தடுப்பு மருந்து அவ்வப்பகுதி பிரதேச சபைத் தொழிலாளர்களால் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு சுகாதாரப் பரிசோதகர்களின் மேற்பார்வையின் கீழ் நலன்புரி நிலையங்களில் விசிறப்பட்டன. (ஐ-173)

# நெடுந்தீவு பிரதேச சபைக்கு ரூபா 10 இலட்சம்

யாழ்ப்பாணம், டிசெ. 4

நெடுந்தீவு பிரதேச சபைக்கு பிரமாண அடிப்படையிலான வேலைத் திட்டத்தின் கீழ் 10 இலட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தால் வழங்கப்பட்ட இந்த நிதியின் மூலம் பனங்கன்றுகள் உற்பத்தி, தென்னம்பிள்ளை உற்பத்தி, கடல் அணை அமைத்தல், மலசல கூடங்கள் அமைத்தல் ஆகிய திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த வேலைகள் 90 சதவிதம் பூர்த்தியடைந்துள்ளதாக உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-10)

# பன்னவேலைப் பயிற்சி நிலையம் திறப்பு

நெடுந்தீவு, டிசெ. 4

நெடுந்தீவில் பன்னவேலைப் பயிற்சி நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

பனை அபிவிருத்திச் சபையும் தேசிய இளைஞர் சேவை மன்றமும் இணைந்து ஆரம்பித்துள்ள இந்த நிலையத்தை பிரதேச சபைத் தலைவர் அ வெ. அரியநாயகம் திறந்து வைத்தார்.

ஓய்வுபெற்ற அதிபர் திருமதி நவயோகம் நரேந்திரன், அருட்திரு. மொன்வெட் அடிகள், தென்னிந்தியத் திருச்சபைப் போதகர் தா. ஆனந்தராசா, பன்னவேலை ஆசிரியை திருமதி இ. சுந்தரம்பிள்ளை ஆகியோர் அங்கு உரையாற்றினர்.

பிரஜைகள் குழுப்பொருளாளர் எஸ் தில்லையம்பலம் பயிற்சி நெறியை ஆரம்பித்து வைத்தார். (ஐ-111)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

புவி திறம் 21 — 01 — 1948



சிவ தலம் 27 — 11 — 1998

## அமரர் மாணிக்கம் இலங்கநாதன்

(முன்னாள் இலங்கை மின்சாரசபை ஊழியர்)

என்நிழல் நீங்களென்றே ஏழை நான்
வாழ்ந்திருந்தேன்
விண்நிழல் விரும்பிச் சிவ வீட்டுக்குச்
சென்றிட்டீர்கள்
ஏனிந்தக் கதியெனக்கு, எப்படித் தாங்கிடுவேன்?
நானிந்தக் கோலத்திலே எப்படி வாழ்ந்திடுவேன்?
சீரற்ற வாழ்வை இந்தச் செகத்திலே
ஏன் தந்தீர்கள்?
வேரற்ற மரமாய்ப் போனேன்
வாழ்வினி எனக்கு ஏது?

மனைவி, பிள்ளைகள்.

66/12, 5 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (81029)

# வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



## திருமதி சிவபாக்கியம் கணபதிப்பிள்ளை

அன்னை மடியில் 11-10-1917 ஆண்டவன் அடியில் 04-11 2000

அன்பால் எம்மை அரவணைத்த தெய்வமே!
அன்னை உனைப்போல் அகிலத்தில் நாம் கண்டதில்லை
ஆண்டு பல சென்றாலும் அகலாது உன் நினைவு
ஆத்மசாந்திக்காய் ஆண்டவனை இறைஞ்சுகிறோம்.

04-11 2000 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட உறவினர். அயலவர், நண்பர்கள், வடமராட்சி வலயக் கல்விச் சமூகத்தினர், தென்மராட்சி வலயக் கல்விச் சமூகத்தினர். பருத்தித்துறைப் பங்குத் தந்தை, அருட்சகோதரிகள், மாணவிகள், வங்கி உத்தியோகத்தர், வணிக நண்பர்கள், தென்மராட்சிப் பிரதேச கிராம அலுவலர்கள், தென்மராட்சிப் பிரதேச மக்கள் ஆகியோருக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டு ஆறுதல்களைத் தெரிவித்த யா/கரவெட்டி ஸ்ரீநாரத வித்தியாலயம், யா/ பரு. சென். தோமஸ் றோ. க. பெண்கள் பாடசாலை, யா/ வட. இந்து மகளிர் கல்லூரி, சாவகச்சேரி பாலர் பராமரிப்பு இல்லம், ஸ்ரீபழனியாண்டவர் ஆலய பரிபாலன சபை, ஸ்ரீ பழனியாண்டவர் சிக்கன கடன் உதவும் சங்கம், சாவகச்சேரி நகர மாதர் அபிவிருத்திச் சங்கம், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் ஆகியவற்றுக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்று (04-12-2000) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

மக்கள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்.
பூட்டப்பிள்ளைகள்

கணையந் தோட்டம்,
புலோலி கிழக்கு, பருத்தித்துறை. (சி/14019)

# சர்வதேச சமூகத்தின் ஆலோசனைப்படியே நிபந்தனையற்ற பேச்சுக்குச் சம்மதித்தோம்!

## லண்டன் மாவீரர் தின நிகழ்வில் அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு

*மாவீரர் நாளை ஒட்டி லண்டன் மாநகரில் அரோனா மண்டபத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற விசேட நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆற்றிய நீண்ட உரையின் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகிறது.*

*சுமார் ஒன்றரை மணிநேரம் நீடித்த அவரது உரை அப்படியே அவரது பேச்சுநடையில் வெளியிடப்படுகின்றது.*

*இதன் எஞ்சிய பகுதி பின்னர் உதயனில் பிரசுரமாகும்.*

இன்று காலை எனது நண்பர் ஒருவர் தொலைபேசி மூலம் என்னுடன் தொடர்பு கொண்டார். "தலைவர் சமாதானப் பேச்சுக்கு ஓமெண்டு சொல்லுகிறார். இங்கே சந்திரிகா அம்மா வந்துநிற்கிறா. உங்களுக்கு ரெலிபோன் அடிச்சால் இரவில பிடிக்க முடியாமல் இருக்கிறது. எல்லோருமாய் சேர்ந்து இரகசியமாக என்ன செய்து கொண்டிருக்கிறியள்?" - என்று அவர் கேட்டார்.

நான் அவருக்குப் பதிலளித்தேன். "மறைமுகமாகவும் இரகசியமாகவும் நாங்கள் ஒன்றும் செய்யவில்லை. எல்லாம் பகிரங்கமாக நடக்கும். அப்படி ஏதாவது செய்யுறது என்றால் உமக்குச் சொல்றன்" என்று நான் அவரிடம் கூறினேன்.

போனமுறை மாவீரர் தினப் பேச்சையொட்டி சில விடயங்களை நான் குறிப்பிட்டு சொன்னேன். நோர்வே பிரதிநிதிகளுக்கு சந்திரிகா அம்மா அதனைக் குறையாக சுட்டிக் காட்டியுள்ளார்.

"பாலசிங்கம் ஒரு கெட்ட மனிசன். கெட்ட பகிடியள் எல்லாம் விடுகிறார்" என்று அம்மா கூறியிருக்கிறார்.

"அதனால், ஏன் இப்படியெல்லாம் செய்தனீங்கள். அவவில உங்களுக்குக் கோபமோ?' என்று நோர்வேக்காரர்கள் கேட்டார்கள்.

நான் "அவவில எனக்கு தனிப்பட்ட கோபம் ஒன்றும் இல்லை. அவவில அன்புதான் இருக்கிறது" - என்று சொன்னேன்.

நான் என்ன வயது போன மனிதனே? எனக்கும் சின்னச் சின்ன ஆசை இருக்கத்தானே செய்யும்.

### மாவீரர் தின அறிக்கை

தலைவர் அவர்கள் வருடாந்த மாவீரர் தின அறிக்கை ஒன்றினை வெளியிட்டு இருக்கிறார். மிகவும் முக்கியமான அறிக்கை அது.

எமது விடுதலை என்கின்ற கொள்கையின் பிரகடனமாக இந்த அறிக்கை இம்முறை வெளியிடப்பட்டிருக்கிறது.

இதில் முக்கியமான அம்சங்கள் என்ன? இதுபற்றிக் கொஞ்சம் விவரமாக விளக்கிச் சொல்லலாம் என விரும்புகின்றேன்.

தலைவரின் அறிக்கையில் நான்கு விடயங்கள் முக்கியமான விடயங்களாக உள்ளன.

ஒன்று - *சமாதானப் பேச்சு*வார்த்தை.

அடுத்தது - அரசியல் நிலைமை.

மற்றது - இராணுவ நிலைமை.

நான்காவது-சர்வதேச நிலைமை.

ஆகவே இந்த நான்கு அம்சங்கள் பற்றியும் எமது விடுதலை இயக்கத்தின் நிலைப்பாடு என்ன என்பதனை அவர் கொடுத்த விளக்கத்துக்குக் கூடுதலாக, தெளிவாக, விளக்கம் அளித்து உங்களுக்கு இந்த விரிவுரையை ஆற்ற விரும்புகின்றேன்.

முதலாவது - சமாதானப் பேச்சுவார்த்தை.

இந்த முழு உலகமுமே தலைவரின் அறிக்கையை எதிர்பார்த்து காத்திருந்த விடயம் அதுதான். தலைவர் பிரபாகரன் அவர்கள் சமாதானப் பேச்சு சம்பந்தமாக என்ன சொல்கிறார்? என்ன சொல்லப் போகிறார்? அவரது நிலைப்பாடு என்ன? - என்பதை என்றுமில்லாத அளவுக்கு இந்த முறை சர்வதேச உலகம் எதிர்பார்த்திருந்தது. அது உங்களுக்குத் தெரியும்.

அந்த அறிக்கையில் சமாதானப் பேச்சுப் பற்றி சொல்லும் போது நிபந்தனையற்ற பேச்சுக்கு நாம் தயார் என்று ஒரு பெரிய குண்டையே தூக்கிப் போடுறார் தலைவர். ஒருவரும் எதிர்பார்க்காத குண்டு இது. ஏனென்றால் இவ்வளவு காலமும் நாங்கள் பல நிபந்தனைகளை வைத்து பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று அறிவித்து வந்தோம்.

ஆனால் இந்த முறை நிபந்தனை அற்ற பேச்சுக்கு தயார் என்று சொல்லி இருக்கிறார் தலைவர். இது ஒரு முக்கியமான விடயம்.

ஆனால் அதேவேளையில் இந்தப் பேச்சுவார்த்தை ஒரு சமாதான சூழலில் - ஒரு நல்ல புறநிலையில் - ஓர் இயல்பான சூழலில் - நடக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்.

அதென்ன சமாதான சூழ்நிலை? சமாதான சூழல் என்றால் அது ஓர் இயல்பு நிலை, சகஜ நிலை என்று கூறவேண்டும்.

தமிழீழத்தில் ஓர் அசாதாரண நிலை உள்ளது. அங்கு பொருளாதார நெருக்குவாரங்கள் உள்ளன. போர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மக்கள் பெரும் அவலத்தில் இருக்கிறார்கள். இப்படியான நிலை இல்லாமல் ஓர் இயல்பு நிலையை உருவாக்கி, ஒரு சமாதான புறநிலையை உருவாக்கிப் பேசுவோம் என்று தான் தலைவர் சொல்லி இருக்கிறார்.

உங்களுக்குத் தெரியும் வன்னியில் நிலைமை மோசம். உணவுத் தடை, மருந்துத் தடை மற்றும் அத்தியாவசியப் பொருள்களுக்குத் தடை.

இப்படியாக பல நெருக்குதல்களுக்கு மத்தியில் - பல பிரச்சினைகள் மத்தியில் - அங்குள்ள மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அத்துடன் மீன்பிடித் தடை, போக்குவரத்துத் தடை, மக்களுக்கு அத்தியாவசிய தேவையான எரிபொருள் தடை, சிமெந்துத் தடை.... இவ்வாறாக ஏகப்பட்ட தடைகள். கடந்த பத்து வருடங்களாக இத்தடைகள் உள்ளன.

இந்தத் தடைகள் ஏன் போட்டார்கள்? இப்பொருள்கள் எதுவும் புலிகளின் கைகளுக்குக் கிடைக்கக் கூடாது என்பதற்குத்தான் இத்தடைகளைப் போட்டார்கள்.

கடந்த எட்டு வருடங்களாக நானும் அங்கு நின்றேன். எங்களுக்குத் தேவையான பொருள்களை நாங்கள் ஏதோ ஒரு வழியில் எடுத்துக் கொள்ளுவம்.

எரிபொருளையோ ஏனைய, விடுதலை இயக்கத்துக்குத் தேவையான பொருள்களையோ நாங்கள் எங்கேயோ இருந்து கொண்டு வந்து சேர்த்து; போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

ஆனால் இந்தத் தடைகள் மக்களை நேரடியாகப் பாதிக்கின்றன. அது சந்திரிகா அம்மாவுக்கும் தெரியும். தெரிந்தும் மக்களின் மன உறுதியை உடைக்க வேண்டும்; புலிகளுக்கு மக்கள் ஆதரவு கொடுக்கக் கூடாது; மக்களின் பொது நல உணர்வை சிதைக்க வேண்டும் - இப்படியான பல நோக்கங்களுக்காக இப்படியான தடைகளை தொடர்ந்து வைத்திருக்கிறார்.

இந்தத் தடைகளை நீக்கி, ஓர் இயல்பு நிலையைக் கொண்டு வர வேண்டும் என்று பிரபாகரன் கேட்கிறார்.

முன்னர் நாங்கள் வடக்கு கிழக்கில் இருந்து இராணுவம் அகற்றப்பட வேண்டும் என்று கேட்டு வந்தோம். இந்தமுறை அந்தக் கோரிக்கையை நாங்கள் வைக்கவில்லை.

போர் நிறுத்தம் செய்துதான் பேச வேண்டும் என்று முன்னர் கூறினோம். தற்பொழுது அதைக் கூட நாங்கள் சொல்லவில்லை.

படிப்படியாக போர் நெருக்கடி தளர்த்தப்பட வேண்டும் என்று தான் கேட்கிறோம்.

ஒட்டு மொத்தத்தில் பார்க்கும் போது பிரபாகரன் தெரிவித்த யோசனைகள் உலகத்தாலே வரவேற்கக் கூடியவை. உண்மையான ஒரு சமாதான முயற்சிக்கு அடிப்படையாக இந்த யோசனைகள் அமைந்துள்ளன.

தலைவர் பேச்சுவார்த்தைக்கு ஒரு நிபந்தனையும் விதிக்கவில்லை. அதேவேளை நல்ல சூழ்நிலை



யிலே, நல்லெண்ணப் புறநிலையிலே, இயல்பு நிலையிலே போர் தணிந்த, நெருக்கடி தணிந்த சூழ்நிலையிலே, பேச்சுவார்த்தை நடத்துவோம் என்று மாத்திரம் அவர் தெரிவித்துள்ளார்.

இது முட்டாள் சிங்களவர்களுக்கு விளங்கவில்லை. என்ன இவர் நிபந்தனை இல்லை என்று கூறி விட்டு நிபந்தனைகளைப் போடுகிறார் என்று அவர்கள் கேட்கிறார்கள். ஆனால் அது உண்மையில் அப்படி இல்லை.

தலைவரின் அறிக்கைக்கு இன்னும் சிறிலங்கா அரசிடமிருந்து ஒரு பதிலும் இல்லை.

பிரதம மந்திரி ஒருரை நியமித்திருக்கின்றார்கள். அவர் யார் என்று தெரியாது. உலகம் முழுக்க சமாதானம் வேண்டும் என்றும் புலிகளோடு பேசவேண்டும் என்றும் கூறிக்கொண்டிருக்கும் போது அவர் மட்டும் 'சண்டை தொடரும்; சண்டை பிடித்துக்கொண்டு சமாதானம் பற்றி பேசுவோம்!' என்று கூறுகிறார்.

அது எப்படி என்றால் "உனக்கு நான் காதைப் பொத்தி அடிப்பேன், நீ என்னை கட்டிப்பிடித்துக் கொஞ்சு!" என்று சொல்லுறமாதிரி இருக்கிறது.

பிறகு "புலிகள் பலவீனப்பட்டு விட்டார்கள். அவர்களால் சண்டை பிடிக்க முடியாது. அதனால் தான் பேச்சுக்கு இறங்கி வருகிறார்கள். எனவே புலிகளோடு இப்போது பேசக் கூடாது"- என்றும் பிரதமர் கூறுகிறார்.

பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்காவுக்கு நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் "விடுதலைப் புலிகள் பலவீனப்படவில்லை, இன்னும் பலம் வாய்ந்த நிலையில் தான் இருக்கின்றோம்." - என்பது தான்.

ஐயா! நாங்கள் சண்டைக்கு பின்னடிக்கின்ற ஆள்கள் இல்லை. ஏனென்றால் சண்டை எங்கடை தொழில்; பிறவித் தொழில். புலி பசித்தாலும் இந்தச் சமாதானப் புல்லை மேயாது. நாங்கள் யானையை விழுங்கி கொட்டையைப் போட்டவர்கள்.

நாங்கள் சமாதானத்துக்கு இணங்கியதற்கு காரணங்கள் இருக்கின்றன. ஒருவகையில உலக நாடுகள் எங்களை வந்து அணுகுகின்றார்கள். ஏன் ஒருக்கால் சமாதானப் பேச்சு பேசிப் பாருங்கள் என்று கேட்கிறார்கள்.

இரத்தக்களறி இல்லாமல் உங்களது இலட்சியத்தை அடைய முடியுமா என்று 'ட்ரை' பண்ணிப்பாருங்கள் என்று கூறுகிறார்கள். "வட அயர்லாந்தைப் பாருங்கள்! பலஸ்தீனத்தைப் பாருங்கள். நீங்களும் ஒருக்கால் சமாதானத்துக்கு 'ட்ரை' *பண்ணுங்கோ!"* - என்று எங்களுக்கு உதாரணங்கள் காட்டுகிறார்கள்.

அப்பொழுது நாங்கள் ஒரு முடிவு எடுத்தோம் - பேசிப் பார்ப்போம் என்று.

கடும் நிபந்தனைகள் போட வேண்டாம் என்று உலக நாடுகள் தான் எங்களை மன்றாடிக் கேட்டன.

ஆகவே சர்வதேசத்தின் ஆலோசனையின் அடிப்படையில் தான் நாங்கள் இந்தப் பேச்சுவார்த்தைக்கு சம்மதித்தோமே தவிர, பயத்திலோ அல்லது பலவீனப்பட்டோ, சண்டைபிடிக்க பின்வாங்கியோ நாங்கள் இந்தப் பேச்சுக்கு வரவில்லை.

### அரசியல் நிலைமை.

தலைவரின் அறிக்கையில் அரசியல் நிலைமையைப் பற்றிச் சொல்லுகிறார்கள். என்ன சொல்லுகிறார்?

சந்திரிகாவின் ஆட்சி அமைப்பில் அதிகார கட்டமைப்பில் இனவாதிகள் இருக்கிறார்கள்; பேரினவாதிகள் இருக்கிறார்கள்; கடும்போக்காளர்கள் இருக்கிறார்கள்; போதாக் குறைக்கு தமிழினத் துரோகக்கும் பல்களும் இருக்கின்றன.

இப்படியான ஓர் ஆட்சி அதிகாரம்தான் அங்கே இருக்கிறது. பேரினவாத, சிங்கள இனவாதிகளைக் கொண்ட இப்படியான ஓர் ஆட்சி தமிழ்மக்களுக்கு நீதி வழங்குமா? வழங்கமாட்டுது என்று வலியுறுத்திச் சொல்லுகிறோம்.

எனக்கு ஒரு நண்பர், இந்த 'ஆட்சி தொடர்பாக கூறும்போது "சந்திரிகா, புலிமுகச் சிலந்தி, மட்டத் தேள், பாம்பு எல்லாவற்றையும் மடியுக்கை கட்டிக் கொண்டு திரியுறா" என்றார்.

"உதுகள் பொல்லாத விஷ ஜந்துகள். ஒரு நாளைக்கு உதிலை ஒன்று அம்மாவைக் கடித்தாலும் கடித்து விடும். பொறுத்த இடத்திலும் கடிச்சுப் போடும்" -என்றும் கூறினார்.

நாற்பது மந்திரிமார். எனக்குத் தெரியும் 45மந்திரிமார் என்று அதில் ஐந்தைக் குறைக்கின்றேன். ஏனென்றால் அதில் முஸ்லிம் சகோதரர்களும் இருக்கிறார்கள். அவர்களை நான் குறைக்கின்றேன்.

நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள் - அலிபாபாவும் நாற்பது திருடர்களும் என்ற கதை. அது போலத்தான் அம்மாவும் நாற்பது திருடர்களும்.

ஏன் இப்படிச் சொல்லுகிறேன் என்றால் இவர்கள் எல்லோரும் தேர்தல் மோசடிகள் செய்துதான் பதவிக்கு வந்துள்ளார்கள்.

பதவியில் ஏன் ஏறியிருக்கினம்? அதிலே இருந்து கொண்டும் பண மோசடி செய்வதற்கே என்பது எங்களுக்குத் தெரியும்.

இப்படியான ஓர் அமைச்சரவை தான் இலங்கையில் இருக்கிறது.

### நானே மந்திரி

எங்கள் இயக்கத்தைப் பாருங்கள். தலைவர் இருக்கிறார். அவருக்கு ஒரேயொரு மந்திரி தான் இருக்கிறார். அது நான்தான். ஆலோசகர் என்ற மந்திரி. ஆனால் அம்மாவின் அமைச்சரவையில் நாற்பது நாக்குகள் இருந்து நாற்பது குரலில் நாற்பது கொள்கைகளோடு பேசுகின்றன.

ஒரு குழப்பமான - தெளிவில்லாத - முரண்பாடுகள் நிறைந்த கருத்துக்களைக் கொண்ட - அரசு. அது தான் உண்மை. அதைத்தான் தலைவர் வலியுறுத்திச் சொல்லியுள்ளார்.

ஆனால் எங்களது இயக்கம் ஒரே குரலில்தான் பேசும். ஓர் இயக்கம், ஓர் இலக்கு, ஒரு கொள்கை, ஒரு *தலைவர்* அப்படியான ஓர் உறுதியான நிலைப்பாட்டில் இருந்துதான் நாங்கள் பேசுகிறோம்.

எங்களுக்கும், எங்கள் விடுதலை இயக்கத்துக்கும், சிங்கள தேசத்துக்கும் ஆட்சி, அதிகார பீடத்துக்கும் உள்ள வேறுபாடுகளை நீங்கள் கவனிக்க வேண்டும்.

சந்திரிகாவும் கதிர்காமரும் சர்வதேச உலகத்தை திருப்திப்படுத்துவதற்காக சில அறிக்கைகள் விடுகிறார்கள்.

" நாங்கள் புலிகளோடு பேசத் தயார்!" என்று இவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் பிரதமரும் இராணுவத் தளபதியும் புலிகளைப் பூண்டோடு அழிப்போம் என்று சொல்லுகிறார்கள். இதே ஒரு பெரிய முரண்பாடாக அங்கே உள்ளது.

மந்திரி சபையில் புலிகளை அழிக்க வேணும் என்றும் புலிகளோடு பேச வேண்டும் என்றும் முரண்பட்ட சக்திகள் இருக்கின்றன.

தலைவரின் அறிக்கையில் இனப் பிரச்சினையைப் பற்றி சந்திரிகா என்ன மாதிரி குழப்பமாக கதைக்கிறார் என்பதையும் தெளிவாகக் கூறியுள்ளார்.

நாடாளுமன்ற திறப்பு விழாவிலே சந்திரிகா ஓர் அறிக்கையை விட்டார். அதிலே தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது என்பதை சொல்லியுள்ளார். 50 வருடங்களாக தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது உண்மைதான் என்று அவர் தெரிவித்தார்.

யார் இழைத்தார்கள், எப்படி இழைக்கப்பட்டது? என்று கூறும் போது, எங்களின் அரசமைப்புச் சட்டங்கள் தான் இதற்குக் காரணம் என்கிறார். தாங்கள் காரணம் இல்லை என்று சொல்லுறார்.

இதுலே அவர் எதனை மூடி மறைககப் பார்க்கிறார்?

சிங்கள பேரினவாத தலைமைகள் காலம் காலமாக தமிழ் மக்கள் மீது ஏவி விடப்பட்ட இந்த ஒடுக்கு முறை வரலாற்றை மூடி மறைத்து, ஏதோ காலனித்துவம் மூலம் வந்த அரசமைப்புச் சட்டங்களின் மீது முழுப் பழியையும் போட்டு, முழுப் பூசனிக்காயையும் சோற்றில் மூடின கதையாக விளக்கம் சொல்லுறார்.

அதைத்தான் தலைவர் தன்னுடைய அறிக்கையிலே நுட்பமான முறையில் அம்பலப்படுத்திக் காட்டியிருக்கிறார்.

நாடாளுமன்ற அறிக்கையில் போர் பற்றி அம்மா கூறும்போது இனப்பிரச்சினையின் வெளிப்பாடு தான் இந்தப் போர் என்று தெரிவித்துள்ளார். அதை நாங்களும் ஏற்றுக் கொள்ளுகின்றோம். ஆனால் அதே பந்தியில் சொல்லுறார் "இது ஓர் ஆயுதப் பயங்கரவாதம்" என்று.

பின்பு "இனப்பிரச்சினையை சமாதான வழியில் தீர்த்து வைக்க முயற்சி செய்வோம். ஆயுதப் பயங்கரவாதத்தைப் போரினால் அழிப்போம்" என்கிறார். இவற்றில் எவ்வளவு முரண்பாடுகள் இருக்கின்றன!.

உண்மையில் தமிழ்மக்களின் இனப்பிரச்சினையின் ஒரு வெளிப்பாடாகவே போர் இருக்கிறது. இந்தப் போருக்கும் இனப்பிரச்சினைக்கும் வேறுபாடு இல்லை. இரண்டும் ஒன்றுதான். நீ இனப்பிரச்சினையைச் சமாதான வழியில் தீர்த்து வைக்கப்போகின்றாயாம். போரை போராலே அழிக்கப் போவதாகவும் சொல்லுகின்றீர்.

அதன் நோக்கம் என்னென்று சொன்னால் போரைத் தொடரவேண்டும். போர் மூலம் புலிகளை அழிக்க வேண்டும் என்ற ஒரு நோக்கத்தோடு தான் இந்தக் கருத்தை முன் வைக்கின்றார். (தொடரும்)

# இந்திய இராணுவ உதவியை அரசு ஒரு போதும் நாடாது!

## அமைச்சர் றெஜி ரணதுங்க தெரிவிப்பு

பெங்களூர்,டிசெ.4

எந்தவொரு கட்டத்திலும் இலங்கை அரசாங்கம் இந்தியாவிடம் இருந்து இராணுவ உதவியைப் பெற்றுக் கொள்ளமாட்டாது.

உணவு மற்றும சந்தைப்படுத்தல் அபிவிருத்தி அமைச்சர் றெஜி ரணதுங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மூன்று நாள் உத்தியோபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு பெங்களூர் சென்ற அமைச்சர் நேற்று முன்தினம் அங்கு செய்தியாளர் மாநாடொன்றை நடத்தினார்.

அமைச்சர் அங்கு மேலும் தெரிவித்தாவது:-

தொடரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்றே பலரும் விரும்புகின்றனர்.

இதற்காகவே இலங்கை அரசாங்கமும் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்க சகல வகையான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

இதேவேளை -

இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதற்காகவும யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்பதற்காகவும் இலங்கை அரசாங்கம் இலங்கை அரசாங்கம் இந்தியாவிடம் இருந்து எந்தவகையான உதவியையும் பெற்றுக் கொள்ளமாட்டாது.

குறிப்பாக இராணுவ உதவி எந்தச்சந்தர்ப்பத்திலும் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.

இப்படி அமைச்சர் றணதுங்க தெரிவித்தார்.

(ஐ-7)


தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம
சைவ கலை பண்பாட்டுப் பேரவை
நடத்தும்

**திருவாசக விழா**

**பண்ணிசைப் போட்டி - 2000**

மேற்படி பேரவையின் ஆதரவில் 07-01-2001 அன்று நிகழவிருக்கும் திருவாசகவிழா தொடர்பாக பாடசாலை மாணவர்களிடையே வழமை போல பண்ணிசைப்போட்டி நடைபெறவுள்ளது.

பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தாங்கள் கல்வி கற்கும தரம் (2000இல்), பாடசாலை, பிறந்ததிகதி என்பவற்றின் விவரங்களை பாடசாலை அதிபர் அல்லது பெற்றோர் மூலம் உறுதிப்படுத்தி 22.12.2000 ற்கு முன் தபால் மூலமோ அல்லது நேரிலோ கையளிக்கவும்.

| பிரிவுகள் | விடயம் |
|---|---|
| 1) ஆண்டு 6 - 7 | சிவபுராணம் |
| 2) ஆண்டு 8 - 9 | திருவெம்பாவை 11ஆம் பாடல்முதல்20 வரை |
| 3) ஆண்டு 10 - 11 | திருப்படையாட்சி |

நடுவர்கள் கேட்கும் பாடல்களை மட்டும் மோகனராகத்தில் பாடிக்காட்டுதல் வேண்டும். அத்துடன் பண்ணிசைப்போட்டியில் பங்குபற்றும் ஒவ்வொரு பிரிவு மாணவர்களினதும் சமயபாடம் தொடர்பான பொது அறிவு எழுத்து மூலம் பரீட்சிக்கப்படும்.

சமயபாடம் தொடர்பான பொது அறிவு அச்சிடப்பட்ட வினாத்தாள் வழங்கி எழுத்து மூலம் பரீட்சிக்கப்படும். பண்ணிசை, சமயஅறிவு இரண்டும் பரீட்சிக்கப்பட்டே முடிவுகள் பெறப்படும்.

போட்டி 27-12-2000 புதன்கிழமை ஆச்சிரமத்தில் நடத்தப்பட்டு வெற்றிபெறும் மாணவர்களுக்கு 07-01-2001 ஞாயிற்றுக்கிழமை நிகழும் திருவாசக விழாவில் பணத்தொகையும் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

*தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-*

திருவாசகப் போட்டிக் குழு,
சந்நிதியான் ஆச்சிரம
சைவ கலை பண்பாட்டுப் பேரவை,
செல்வச்சந்நிதி, தொண்டமனாறு.

(C/14145)


### நிறுவுநர் தினம்

யாழ்ப்பாணம்,டிசெ.4

கரணவாய் பொன்னம்பல வித்தியாலய பரிசளிப்புவிழாவும், நிறுவுநர் தினமும், அமரர் பொன். கணபதிப்பிள்ளை மரகதவல்லி தம்பதியர் நினைவாக நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும்.

வித்தியாலய அதிபர் க. பொன்னையா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக ஸ்தாபகரின் குடும்ப உறுப்பினர் ம. தருமகுலசிங்கம் கலந்து கொள்வார்.

பரிசில்களை திருமதி நிர்மலா தேவி தர்மகுலசிங்கம் வழங்குவார்.

(ம-15)

### எல்லைப்படை உறுப்பினர் மரணம்

வவுனியா,டிசெ.4

நாகர்கோவில் பகுதியில் கடந்த 30 ஆம் திகதி இடம் பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் தமது தரப்பில் எல்லைப் படையைச் சேர்ந்த ரவி (இராமசாமி இராசலிங்கம் - யாழ்ப்பாணம்) என்பவர் உயிரிழந்ததாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

(ஐ-7)

### பூமி புத்திர கட்சியிலிருந்து பலர்வெளியேற்றம்

கொழும்பு,டிசெ.4

சிங்கள இனவாதக் கட்சியான பூமி புத்திர கட்சியில் இருந்து பலர் வெளியேறி பொது மக்கள் ஐக்கிய முன்னணியில் இணைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த பொதுத் தேர்தலில் அந்தக் கட்சி படுதோல்வி அடைந்ததை அடுத்தே கட்சியின் அமைப்பாளர்கள் சிலரும் உறுப்பினர்கள் பலரும் கட்சியை விட்டு வெளியேறி பொ.ஐ. முவில் இணைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இனவாதக் கருத்துக்களை தீவிரமாக முன்வைத்து கடந்த தேர்தலில் போட்டியிட்ட போதும் இக்கட்சி படுதோல்வி அடைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

(ம-6)


BARATHY
சித்தன்கேணி
A/L DAY CLASS
கலை-வர்த்தகம்
*புதிய பிரிவு ஆரம்பம்:*
06-12-2000
எமது வழமையான
ஆசிரியர் குழுவினால்.
*அனுமதிகளை பெற்றுக்
கொள்ளவும்.*
(81204)


## கண்ணீர் அஞ்சலி

அண்மையில் இந்தியாவில் காலமான பழம்பெரும் முற்போக்குச் சிந்தனையாளனும், மக்கள் சேவகனும், மக்கள் வங்கி ஊர்காவற்றுறை - முன்னாள் பொது முகாமையாளருமான

**அமரர் ஆ.சண்முகநாதன்**

அவர்களின் மறைவையிட்டு அமரரின் குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும் எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகிறோம்.

*நண்பர்கள்* -
சோ.சிவபாலன்,
S.K.தங்கவடிவேல்,
அ.ஜெயசீலன், மா.சுந்தரம்.

*யாழ்ப்பாணம்.* (81189)

## 6 ஆம் மாத நினைவஞ்சலி

மண்ணில் 08 - 10 - 1942



விண்ணில் 09 - 06 - 2000

**அமரர் க.சி.கிருஷ்ணசாமி**

(ஓய்வுபெற்ற தபாலதிபர், பகுதி நேர ஆங்கில ஆசிரியர், மீசாலை வீரசிங்கம் ம.வி.)

திதி: பூர்வபக்க அட்டமி

ஐயனே!
ஆறாத வேதனையில் ஆறுமாதம் கழிகிறது.
ஓயாத நினைவதனில் உள்ளம் கரைகிறது.
மீளோமா ஊரில் மீண்டொரு நாள் கூடோமோ?
சந்நிதியின் வேலனை தகுந்த விடை தாருமென்றும்
உம் நிலைமை உணர்ந்து சாந்தியருள வேண்டுமென்றும்

பிரார்த்தித்து நிற்கும்
- குடும்பத்தினர்.

*நிரந்திர முகவரி:-*
*"அயோத்தி"*
*மீசாலை மேற்கு, மீசாலை.*

(81162)

## பாராட்டு

யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட பதவிநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தரான

**திரு. சரவணமுத்து தேவதாசன்**

B.A.Dip. (HONS) அவர்கள்

யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்தமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இவர் யாழ். பல்கலைக்கழகத்தின் முதலாவது சிரேஷ்ட பதவி நிலைத் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (புள்ளிவிவரவியல்) பதவியை வகிப்பவரும், பருத்தித்துறை பிரஜைகள் குழுத் தலைவரும், ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் தர்மகர்த்தா சபைச் செயலாளரும், இலங்கைச் சைவ மன்ற பத்திராசிரியருமாவார்.

இவர் பருத்தித்துறை கற்கோவளத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டவரும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவருமாவார். இவருடைய சேவைகள் தொடர வாழ்த்துகின்றோம்.

*தொழில் நுட்ப உத்தியோகத்தர்,*
*விலங்கியல், தாவரவியல் துறை.*

(81130)

## 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி

எம் உள்ளம் உறைபவர்



**அமரர் இ.க.சண்முகநாதன்**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 14-12-1924 | 04-12-1985 |

இளமையிலே கருத்தூன்றி அறிவு தேடி
'ஈக்கே' சண்முகநாதன், நீர்வேலிக்கோர்
ஒளிவிளக்காய் முகங்காட்டி நிமிர்ந்து நின்றார்;
உபாத்திமையின் மணி மகுடம் வாங்கி வென்றார்.
பளபளத்துப் புகழ் பரப்பி அறிவு பூத்த
பரியோவான் கல்லூரி ஆசான் ஆனார்.
தளர்வறியாச் செயல்வீரம் பூண்டதாலே
தாம் சார்ந்த சூழலுக்கே வெளிச்சம் தந்தார்.

கோப்பாயின் கிறிஸ்தவ கல்லூரி மேவி,
கோமானாய் - அதிபராய்ப் - பிரகாசித்தும்
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மேவி
ஏற்றமிகு முதல்வராய்ப் பிரகாசித்தும்
மேற்பார்வைத் திறம் கொண்டு, கல்வி ஆளும்
விழுமியதொரு பணிப்பாளராய்த் திகழ்ந்த
'ஈக்கே' சண்முகநாதன் பணிகள் எல்லாம்
எண்ணி எண்ணி அஞ்சலித்தோம்; மனம் பூரித்தோம்.

ஓராட்டித் தாலாட்டிக் குழந்தை பேணி
ஒத்துழைத்துப் பெற்றார்க்குக் கைகொடுக்கும்
நீர்வேலிப் பாலர் பகல் விடுதி, அன்று
நிறுவனமாய் நிமிர்ந்தெழும்ப உழைத்த சீலர்,
ஊர் கூடிச் சீராட்டும் உயர்வு கொண்ட
உத்தமர் சண்முகநாதன் மகிமை பேசிப்
பாராட்டி நினைவில் வைத்துப் பசுமையாகப்
பரிவுடனே பேணுகிறோம் - நீர்வை மக்கள்.

ஓய்வு பெற்ற பின்னும் நைஜீரியாவில்
உதவி நிதியாளராய் விளங்கி நின்று
நேயமுடன் செயல் புரிந்த சான்றோரான
நிர்வாகி, கல்விமான், மக்கள் தொண்டர்,
சாயாத நடுநிலையர், தயாளர், சீலர் -
சண்முகநாதப் பெரியார் நினைவு போற்றி
வாயார வாழ்த்துகிறோம், புகழ்கின்றோம்;
மனமார நன்றியுடன் தியானிக்கின்றோம்.

**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*'நியூதாரங்கி'*
*109, பலாலி வீதி,*
*திருநெல்வேலி.*

(81192)

பொதுசன நூலகம்

# பண்டாரவ்ளைச் சம்பவத்தைக் கண்டித்து மலையகத்தில் சட்டமறுப்புப் போர்!

## மலையக மக்கள் முன்னணி ஏற்பாட்டில்

கொழும்பு,டிசெ.4

பண்டாரவளைத் தடுப்பு முகாமில் அப்பாவித் தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தும் -

அப்பாவித் தமிழ் இளைஞர்கள் பலர் பொலீஸாரால் காரணமின்றிக் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பதைக் கண்டித்தும் -

சட்டமறுப்புப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், எம்.பியுமான பெ.சந்திரசேகரன் அறிவித்துள்ளார்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் மலையக இளைஞர்களைக் கைது செய்து தடுத்து வைக்கும் செயலானது மலையக இளைஞர்களைப் பழி வாங்குவது போலாகும்.

மேற்படி இளைஞர்களின் விடுதலை தொடர்பாக சம்பந்தப்பட்ட சகல தரப்பினருக்கும் எடுத்துக் கூறியும் இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே தொடர்ந்தும் மலையக இளைஞர்களின் விடுதலை தாமதிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட இளைஞர்களின் விடுதலைக்காக சட்டமறுப்புப் போராட்டத்தில் குதிக்க வேண்டி ஏற்படும். இந்தச் சட்டமறுப்பு போராட்டத்துக்காக சிறைக்குச் செல்லவும் தயங்கமாட்டேன்.

இப்படி அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ-7)


## பாராட்டி வாழ்த்துகிறோம்



இலங்கை வங்கியின் சிரேஷ்ட முகாமையாளராக உயர்ந்து செல்லும்

**உயர்திரு. அ.தங்கேஸ்வரன்**

(முகாமையாளர் - இலங்கை வங்கி, வவுனியா.)

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

நண்பர்கள்
திரு. ஆர்.ஸ்ரீபாலரெத்தினம்
திரு. ஆர்.சுதாகரன்
திரு. ஆசை.யோகராசா
திரு. என்.கணேசநாதன்

யாழ்ப்பாணம். (81129)



அல்வாய்,
வேவிலந்தை முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்

## 1009 கலச சங்காபிஷேகம்

நாளை 20 ஆம் நாள் (05-12-2000) செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு 1009 கலச சங்காபிஷேகம் நடைபெற திருவருள் கைகூடி உள்ளது.

ஆகவே அடியார்கள் அனைவரும் வந்து அம்பாளின் திருவருள் பெற்றுக்கொள்ளும் வண்ணம் வேண்டுகிறோம்.

ஆலய பிரதம குருக்கள்:
சிவாகம கிரியாநிதி
சிவப்பிரம ஸ்ரீ சி.சுரேஸ்வரக்குருக்கள்.

உபயம்:-
சி.கணேசமூர்த்தி குடும்பத்தினர்.
(அம்பிகை தொலைத்தொடர்பு நிலையம்)
T.P : 070-212492

அல்வாய் வடக்கு,
அல்வாய். (81187)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம்

**மேதகு கே.என். டக்ளஸ் தேவானந்தா**

அவர்கள் வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு, வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சராக நியமிக்கப்பட்டதையிட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைவதோடு அவரது வெற்றிக்கு தென்மராட்சி சார்பில் பங்காற்றிய தென்மராட்சி அமைப்பாளர்

**தோழர் அலெக்சாண்டர் சாள்ஸ்**

அவர்களையும் அவர்சார் கட்சி உறுப்பினர்களையும் பாராட்டுவதோடு அவர்கள் சேவை மேன்மேலும் சிறப்புற உணர்வு கலந்து பிரார்த்திக்கின்றோம.

சமுர்த்தி உத்தியோகத்தர்கள்,
தென்மராட்சி.

(81145)



## யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் நிவிர்த்திச் சங்கம் (வ-து)

### நாற்பதாவது வருடாந்தப் பொதுக் கூட்டம்

இடம் :- மணிக்கூண்டு வீதியில் அமைந்துள்ள யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபம்.
காலம் :- நாளை மறுதினம் (06.12.2000) புதன்கிழமை
நேரம் :- காலை 9.30 மணி
தலைவர் :- திரு. வி.இராசநாயகம் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகம் தரும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

செ.பேரின்பநாதன்,
செயலாளர்.

(C/14068)


## இவருக்கு உதவுங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.4

கோண்டாவில், அரசடி ஒழுங்கையில் வசிக்கும் தம்பித்துரை சதீஸ்குமார் என்ற 21 வயது இளைஞருக்கு இரண்டு சிறுநீரகங்களும் பழுதடைந்த் காரணத்தால் அவர் உயிருக்குப் போராடி வருகிறார்.

அவர் விரைவில் இந்தியா சென்று சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சை செய்து கொண்டால் உயிர்பிழைக்க முடியும் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

பொருளாதார நிலையில் பின்தங்கிய நிலையில் உள்ள குடும்பத்தைச் சேர்ந்த இந்த நோயாளி இந்தியா சென்று சிகிச்சைபெற உதவும் பொருட்டு வடமாநில இந்துமாமன்றத்தினர் நிதி ஒன்றை ஆரம்பித்துள்ளனர். இதன் பொருட்டு யாழ். ஹற்றன் நஷனல் வங்கியில் க/இல. 23378 என்ற கணக்கை மன்றத்தினர் ஆரம்பித்துள்ளனர்.

இந்த காருண்ணியப் பணிக்கு தம்மால் இயன்ற அன்பளிப்புகளை வங்கிக் கணக்கில் செலுத்தி உதவுமாறு மன்றத்தின் சார்பில் ஆ.சிறிக்குமாரன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஒ)

## வெடிமருந்து மீட்பு

மதவாச்சி - மன்னார் வீதியிலுள்ள தமிழர் ஒருவரின் வீட்டிலிருந்து கடந்த வெள்ளியன்று 12 கிலோ வெடிமருந்து மீட்கப்பட்டதாக படைத்தரப்பு தெரிவித்தது.

இரகசியத் தகவல் ஒன்றின் பேரில் அந்த வீட்டை முற்றுகையிட்ட படையினர் அந்த வீட்டுக்கு அருகில் வாளி ஒன்றில் வைக்கப்பட்டு நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த வெடிமருந்து வகைகளையும், ஆயுத தளபாடங்களையும் கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3-64)

## ஆசிரிய கலாசாலையில் முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம்,டிசெ.4

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முத்தமிழ் மன்றம் நடத்தும் முத்தமிழ்விழா நாளை செவ்வாய்க்கிழமை கலாசாலை ரதிலஷ்மி மண்டபத்தில் முற்பகல் 9.30 மணிமுதல் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் கலந்துகொள்வார். 'கலைமலர்' சஞ்சிகை வெளியீடும் இடம் பெறும். கவியரங்கம் உட்பட பல கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (ஓ)

## விலைக் கட்டுப்பாடு தொடர்பாக கூட்டம்

யாழ்ப்பாணத்தில் மருந்துப் பொருள்களின் அதிகரித்த விலையை கட்டுப்படுத்துவது தொடர்பான கூட்டம் ஒன்று யாழ். அரசாங்க அதிபரின் அலுவலகத்தில் நடைபெற்றது.சுகாதாரத் திணைக்கள உயர் அதிகாரிகளும் அரச அதிபரும் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் மருந்துப் பொருள்களுக்கான விலைகளை நிர்ணயம் செய்வது தொடர்பாக ஆராயப்பட்டது. (ஐ-5)



யாழ்ப்பாணம் மகாஜனாக் கல்லூரி மாணவன் செல்வன் இ.குணசீலன் பெறுமதிமிக்க தாலிக்கொடியொன்றைக் கண்டெடுத்து உரியவரிடம் சமர்ப்பித்த பெருமைக்குரிய செயலைப் பாராட்டி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி எடுத்த விழாவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டப்படிப்புகள் துறைப் பீடாதிபதி அ.சண்முகதாஸ் பிரஸ்தாப மாணவனுக்கு மாலை அணிவித்துக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (ஐ-3)

## மக்கள் முகம்



யாழ்.மத்திய கல்லூரி, யாழ்.சம்பத்திரிசியார் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவனும் யாழ். ஆனைப்பந்தியடியைப் பிறப்பிடமாகக் கொண்டவருமாகிய பொன்னுத்துரை சண்முகநாதன் அகில இலங்கை சமாதான நீதிவானாக தெஹிவளை நீதிமன்றில் சத்தியப்பிரமாணம் செய்துள்ளார். இவர் சிறந்த சமூகத் தொண்டனும், கலை, சிறுகைத்தொழில் விற்பன்னரும் ஆவார். (ஐ-17)

★ ★ ★



மட்டுவில் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் பிறவுண் வீதி ஓராம் ஒழுங்கை இல.18இல் வசிப்பவருமான பொன்னுத்துரை குகநாதன், மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிவான் ப.சுப்பிரமணியம் முன்னிலையில் கடந்த ஒக்ரோபர் 31 ஆம் திகதி யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை வட்டக்கச்சி மகா வித்தியாலயத்திலும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும் உயர் கல்வியை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் கற்று, யாழ்.பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமாணிப் பட்டமும் பெற்றுள்ளார்.

1993 இல் திருகோணமலை நிலாவெளி குச்சவெளி கமநல கேந்திர நிலையத்தில் பெரும்பாக உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டு சேவையாற்றினார். 1995 முதல் இன்றுவரை யாழ்.மாவட்டத்திலுள்ள உடுவில், தொல்புரம், கீரிமலை ஆகியவற்றின் கமநல கேந்திர நிலையங்களின் பெரும்பாக உத்தியோகத்தராகவும் சேவைபுரிந்து வருகிறார்.

இக்காலத்தில் உடுவில் கமநலக் கேந்திர நிலையப் பிரிவில் 24 விவசாய சம்மேளனங்களையும், கீரிமலைப் பிரிவில் 12 சம்மேளனங்களையும் தொல்புரப் பிரிவில் 11 சம்மேளனங்களையுமாக மொத்தம் 47 விவசாய சம்மேளனங்களை உருவாக்கியுள்ளார். (ஐ-30)

★ ★ ★

மானிப்பாய், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை தலைமை அபிவிருத்தி உதவியாளர் செல்வராசா ரமேஷ் சமாதான நீதிவானாக மாவட்ட நீதிபதி பா.பாலசுப்பிரமணியம் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

நவாலியூர் செல்வராசா - செல்வராணி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வரான இவர், யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு உளவியல் இடைவரவு விரிவுரையாளரும், திறந்த பல்கலைக்கழக முகாமைத்துவ இடைவரவு விரிவுரையாளரும் ஆவார்.

நவாலி அட்டகிரி வழிபடுவோர் சங்க முன்னாள் செயலாளரான இவர் தற்போது யாழ்.சுகவாழ்வு நிறுவனம், நவாலி விவசாய சம்மேளனம் ஆகியவற்றின் செயலாளராகவும், நவாலி சிந்தாமணிப் பிள்ளையார் ஆலய திருப்பணிச்சபை உப செயலாளராகவும் பணியாற்றி வருகிறார்.

யாழ்.சாந்திக உளவள துணையாளரும் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் ஹொக்கி அணித் தலைவருமான இவர், சிறந்த விளையாட்டு வீரருக்கான (**Colours**) விருது பெற்றதுடன், தேசிய ரீதியில் 5ஆவது மினி ஒலிம்பிக் போட்டியிலும் பங்குபற்றியுள்ளார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவரும், அக்கல்லூரியின் முன்னாள் பொருளியல் வணிகப் புள்ளிவிவரவியல் விரிவுரையாளருமான இவர் பத்திரிகைத் துறையிலும் பணியாற்றி வருகிறார். (ஐ-15)

★ ★ ★



மானிப்பாய் முதலாம் குறுக்குத் தெரு இணுவில் வீதியைச் சேர்ந்த ஏ.ஜே.செல்வரட்ணம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் லயன் எஸ்.ஜே. செல்வராசா சமாதான நீதிவானாக அண்மையில் மல்லாகம் மாவட்ட நீதிபதி சுப்பிரமணியம் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க முன்னாள் தலைவரும் தற்போதைய இயக்குநரும், உடுவில் அரச மத்திய மருந்தக அபிவிருத்திச் சபைத் தலைவரும் வடகிழக்கு மானிப்பாய் பாரதி சனசமூக நிலைய செயலாளரும், மானிப்பாய் திருச்சபை நிர்வாக ஆதீனப் பிரதிநிதியும், கல்லூரி அபிவிருத்திச் சங்க நிர்வாகசபை உறுப்பினரும், மானிப்பாய் மக்கள் குழு உறுப்பினரும், மானிப்பாய் வை.எம்.சி.ஏ.நிர்வாக செயலாளரும், சர்வதேச லயன்ஸ் கழக மானிப்பாய் வட்ட பொருளாளரும், தென்னிந்திய திருச்சபை யாழ்.பேராய கவுன்ஸிலரும், ஆனந்தா விளையாட்டுக்கழக ஆலோசகரும், பழைய மாணவர் சங்க செயலாளரும், தென்னிந்திய திருச்சபையின் மானிப்பாய கிறீன் வைத்தியசாலை, மக்லியோட் வைத்தியசாலை ஆகியவற்றின் முன்னாள் செயலாளருமாவார். (ஐ-100)

★ ★ ★



உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் தரம் 11இல் கல்வி கற்கும் செல்வி சியாமளா திருச்செல்வம் வடக்கு கிழக்கு மாகாண நீர்ப்பாசன திணைக்களத்தினால் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று 2500 ரூபா பணத்தையும் சான்றிதழையும் பரிசாகப் பெற்றுக் கொண்டார். இவர் கோட்ட, வலய மட்டங்களில் நடைபெற்ற நாடகப் போட்டிகளிலும் பங்குபற்றியுள்ளார். (ஐ-72)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## செவ்வாய் மாற்றம்

(16.12.2000 - 07.02.2001 வரை) யுத்தச் செவ்வாய் வக்கிர நீசச் சனியையும், வக்கிர வியாழனையும் நோக்குவது நாட்டுக்கு நன்மையல்ல. குரு, சனி வக்கிரங்கள் எங்கும் விற்பனையாகின்றன. 'சத்யா' (ஜோதிட நூலாசிரியர்), ஆனைக்கோட்டை. (81172)

## விற்பனைக்கு

எம்மிடம் புத்தம் புதிய மோட்டார் சைக்கிள் **ANKUR (Hero-Majestic)** நியாயமான விலையில விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 190, கே. கே. எஸ்.வீதி, யாழ்ப்பாணம். (81120)

**AKAI** டெக் செற் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- N. செல்வராஜா, வட்டு.கிழக்கு, வட்டுக்கோட்டை. (81183)

இன்டஸ்ரியல் **(INDUSTRIAL)** தையல் மெஷின்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: ஜோண், 27/3, புங்கன்குளம் வீதி, பாண்டியன்தாழ்வு. (81177)

## வீட்டுடன் காணி உடன் விற்பனைக்கு

சுதுமலையில்,மானிப்பாய் தாவடி வீதிக்கு மிக அண்மையில் பயன் தரும காணியுடன் கூடிய சகல வசதியுள்ள வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ப. சுந்தரலிங்கம், 'பசுபதாபதி', சுதுமலைமத்தி, மானிப்பாய். (80172)

## O/L ENGLISH MODEL PAPER WITH ANSWERS

மார்கழி 2000 மாதத்திற்கான பரீட்சார்த்திகளுக்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்டது. யாழ்ப்பாணம், மானிப்பாய் மற்றும் அனைத்து இடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம். K. சோமசுந்தரம், சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (81073)

## இலக்கியக்கட்டுரைகள்

'வீடற்றவன்' நாவல் கிடைக்கவில்லையா? கவலைப்படாதீர்கள். அதற்கு அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை விளக்கம் எழுதியிருக்கிறார். 10-11ஆம் தரங்களில் தமிழ் இலக்கியம் கற்கவும் கற்பிக்கவும் உதவக்கூடிய இலக்கிய விமர்சன நூல். (81212)

## காணி விற்பனைக்கு

பிரதான வீதி, சிவன் கோயிலடியில சுற்றுமதிலுடன் 3/4 பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- க.சிவராஜா, 325, பிரதான வீதி, பருத்தித்துறை. (81194)

## தவறிவிட்டது

திருமதி ரவீந்திரன் இராசமணி என்பவருடைய தே.அ.அ. (இல.**685232715V**),விசேட அ.அ., தங்கநகை (5பவுண்), காசு 3,170 என்பன கைப்பையுடன் மானிப்பாய்க்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் (மினிபஸ்ஸில்) தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சி.ரவீந்திரன், 7ஆம் கட்டை, சண்டிலிப்பாய் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (81191)

## பயிற்சி கொடுப்பனவு

புலோப்பளை தும்புத் தொழிற்சாலையில் பயிலுநர்களாகக் கடமையாற்றியவர்களுக்கு பயிற்சிக் காலக் கொடுப்பனவுகள் பளைப் பிரதேச செயலகத்தினால் வழங்கப்படவுள்ளன.

இப் பயிற்சிநெறியில் பங்கு பற்றிய பயிலுநர்கள் உடனடியாக புலோலியில் இயங்கும் பிரதேச செயலக உப அலுவலகத்துக்குச் சமுகமளிக்குமாறு பிரதேச செயலர் சு.புத்திரசிகாமணி அறிவித்துள்ளார். (ஜ-117)

## ஒளி விழா

யாழ்.வை.எம்.சி.ஏ.யினால் நடத்தப்படும் முன்பள்ளிகளில் கிறிஸ்மஸ் ஒளிவிழா நாளை செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு சுண்டிக்குளியிலுள்ள வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை-

நத்தார் பண்டிகையையொட்டி 101 வயோதிபருக்கு வை.எம்.சி.ஏ. அண்மையில் உலர் உணவு நிவாரணம் வழங்கியது. (ஜ-5)

# நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதி



குடாநாட்டு மக்களின் அவல வாழ்வை உலகுக்கு அம்பலப்படுத்தும் புனிதமான பத்திரிகைப் பணியில் துணிச்சலுடன் ஈடுபட்டு, மிரட்டல்களுக்கு அடிபணியாமல் கடமைக்காகத் தன் உயிர் ஈந்தவர் சகோதர பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜன்.

உண்மைகளைச் சீரணிக்க முடியாதவர்களால் அவர் படுகொலை செய்யப்பட்டார். மூன்று சின்னஞ்சிறார்களைக் கொண்ட அவரின் இளம் குடும்பத்துக்கு உதவும் மனிதாபிமானப் பணியை உதயன் ஆரம்பித்தது.

நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதிக்கு யாழ்ப்பாணச் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் அள்ளி அள்ளி வழங்கி எமது மக்களின் இரக்க சிந்தைக்குச் சிகரம் வைக்கிறார்கள். எமக்கு மத்தியில் அன்புள்ளங்கள் நிறைந்துள்ளன என்று எடுத்துக்காட்டி வருகின்றனர்.

உதவி நிதி நாளாந்தம் வந்து குவிகிறது. இந்நிதியை நிமலராஜன் குடும்பத்தினரிடம் உரிய முறையில் சேர்ப்பிக்கும் பொருட்டு அன்பளிப்புகளைப் பெறுவதை நாளை 5ஆம் திகதியுடன் பூர்த்தி செய்ய உள்ளோம் என்பதை அறியததருகின்றோம்.

கருணையும், வள்ளல் தன்மையும உள்ள எங்கள் வாசகர்களுக்கு எமது உளமார்ந்த நன்றிகள்.

**02.12.2000 (சனிக்கிழமை) வரை கிடைத்த நிதி:-**

| | | ரூபா |
|---|---|---|
| | முன்கொண்டுவரப்பட்டது | - 10,67,177.75 |
| 1. | ஓர் அன்பர் - சிவகுருநாதர் லேன் நீராவியடி - | 200 |
| 2. | பால் உற்பத்தியாளர்கள் - கால்நடைவளர்ப்போர் கூ.சங்கம், வடமராட்சி - | 1,200 |
| 3. | தே.கேசவானந்தம் - துன்னாலை தெற்கு கரவெட்டி | 150 |
| 4. | தே.யசோதாதேவி - துன்னாலை தெற்கு கரவெட்டி | 150 |
| 5. | ஏ.தவகுமாரன் - மானிப்பாய் - | 200 |
| 6. | அன்பர்கள் - அல்வாய் கவிஞர் செல்லையா வீதி, அல்வாய் - | 1,200 |
| 7. | நலன்விரும்பி - ஏழாலை மேற்கு - | 100 |
| 8. | சுப்பஸோ வீடியோ ஓடியோ அன் கலர் லாப் நிறுவனம், யாழ்ப்பாணம் - | 5,000 |
| 9. | ஓர் அன்பர் - றக்கா றோட், யாழ்ப்பாணம் - | 500 |
| 10. | இன்ரறக்ட் கழகம் - வேம்படி உயர்தர மகளிர் கல்லூரி, யாழ். - | 1,000 |
| 11. | புவானியார் ஆலய இளைஞர் குழுமம் ஆஸ்பத்திரி வீதி, யாழ். - | 1,000 |
| 12. | தர்மராசா ரேனுசாந் - தையிட்டி காங்கேசன்துறை | 100 |
| 13. | ஓர் அன்பர் - வேலணை - | 200 |
| 14. | வ.சிவகணேசநாதன் - சர்மிளா றேடர்ஸ் உரும்பிராய் | 2,000 |
| | மொத்தம் | - 10,80,177.75 |

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## திருமதி விசாலாட்சி பரராஜசிங்கம்

அன்னை மடியில் 28-08-1920 — அம்மன் காலடியில் 04-11-2000

04-11-2000 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது தாயார் சுகவீனமுற்ற வேளை அவரை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற வாகன உரிமையாளருக்கும், அவசர சிகிச்சைப் பிரிவு வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள் அனைவருக்கும், யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமைச் செயலக முகாமையாளர்கள், ஊழியர்கள் மற்றும், யா.ப.நோ.கூ.ச.கிளை இல.04 இன் செயற்குழு உறுப்பினர்களுக்கும் மலர் வளையம் சாத்தி அஞ்சலி செலுத்தியோருக்கும், தொலைபேசி மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும், பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும், கிராமசேவை உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த அயலவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இன்று (04-12-2000) திங்கட்கிழமை நடைபெறவுள்ள அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

தற்போதைய சூழ்நிலை காரணமாக அந்தியேட்டி அழைப்பிதழ் வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டிருப்பதற்கு மன்னிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**ப.சிறிபாலகிருஸ்ணன்,**
(அண்ணாமலை)
**ப.சிறிபாலச்சந்திரன்**
(சச்சி)

*573,மானிப்பாய் றோட்,*
*யாழ்ப்பாணம்.*
(81211)

# யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு

**2001** இற்கான **G.A.Q 1st in Com.** வகுப்புக்கள் ஆரம்பமாகி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

**2002** இற்கான புதிய பிரிவுகள் விரைவில் ஆரம்பமாக இருக்கின்றது.

- இப் பட்டப் பாடநெறி வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம் ஆகிய இரு இடங்களிலும் இடம்பெறும்.
- பல்கலைக்கழகப் பதிவுகள் எமது நிறுவனத்தால் செய்துதரப்படும்.
- மேலதிக விவரங்களுக்கு பதிவாளருடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்,
**பட்டப்படிப்புகள் பிரிவு**
**யாழ்ப்பாணக் கல்லூரி,**
**வட்டுக்கோட்டை.**

பதிவாளர்:-
*பட்டப்படிப்புகள் பிரிவு*
*யாழ்ப்பாணக் கல்லூரி*
***Jaffna Branch.***
***464, Hospital Rd. Jaffna.***
(வர்த்தக வங்கிக்கு அருகில்) (C/14124)

# ஓராண்டு நினைவலைகள்



## திருமதி செல்லத்துரை அன்னம்மா

(வட்டுவினி, இணுவில் மேற்கு)

ஓயவில்லை உன் நினைப்பு
காயவில்லை கண்ணீரும்
வட்டுவினியான் பாதம் சாந்தி பெற
தொட்டு நிலம் பிரார்த்தித்து
நிதம் உங்கள் ஆசைக்காய்
பதம் பணிவோம் எம் தாயே!

- குடும்பத்தினர்.

*"அன்னை விலா"*
*இணுவில் மேற்கு,*
*இணுவில்.*
(81213)

# 31 ஆம் நாள் நெஞ்சகலா நினைவஞ்சலி

நேமியில் 09 - 03 - 1910



நிமலனடியில் 04 - 11 - 2000

காங்கேயனூர் சித்த வைத்தியகலாநிதி

## அமரர் கோவிந்தர் சின்னத்தம்பி R.I.M.P.

(ஸ்ரீ பராசக்தி அம்பாள் ஆலய அறங்காவலர்)

வையம் புலர வாழ்வு துலங்க
மெய்யொடு மெய்யாய்
மேதினி போற்ற பொய்யகல்
வாழ்வு புரிந்த சீரோன்
வைத்தியத்துறையில்
வளங்கொழித்திட்டு
பையவே பரமன் பாதியாம் சக்தி
பொன்மலர்ப் பாதம்
போயுயர்ந்தனனே!

இறுதிக்கிரியைகளில் இன்முகத்தோடு பல்வேறு வழிகளில் உதவியோருக்கு உளமார்ந்த நன்றிகள்.

அமரரின் செழுங்கிளை சார்பாய்
அன்புப் பேரர்கள்:-
**சி.வே.மோகன் பாரதி**
**சி.வே.மாறன் இளங்கோ**

*190,முதலாம் குறுக்குத் தெரு,*
*யாழ்ப்பாணம்.*
(81210)

# பிரிட்டிஷ் தனியார் வங்கிகளிடம் இலங்கை 800 கோடி ரூபா கடன்

இலங்கை அரசாங்கம் பிரிட்டனின் தனியார் வங்கிகளிலிருந்து 800 கோடி (10 கோடி அமெரிக்க டொலர்) ரூபாவை விசேட கடனாகப் பெற்றுள்ளதாக மத்தியவங்கி ஆளுநர் ஏ. எஸ். ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய நாடுகளின் தனியார் வங்கிகளில் இருந்து இலங்கை வங்கி மூலமாக ஏற்கனவே கடன் பெற்றிருந்தாலும் இவ்வளவு பெரும் தொகைப்பணம் கடனாகப் பெற்றது இதுவே முதல் தடவை என்றும் அவர் கூறியிருக்கிறார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் மீதிப் பங்கையும், ரெலிக்கொம் நிறுவனத்தின் மீதிப் பங்கையும் விற்பனை செய்து லாபம் பெற முடியாத நிலை ஏற்பட்டிருப்பதும் யுத்த செலவினங்கள் அதிகரிப்புமே இதற்குக் காரணம் என அவர் தெரிவித்தார்.

குறிப்பாக ரெலிக்கொம் நிறுவனத்தின் மீதிப் பங்கு 40 கோடி ரூபாவுக்கு விற்பனை செய்து லாபம் பெற முடியாதுள்ளதாகவும் அதற்கான மாற்று வழிகள் தற்போதைக்குச் சாத்தியப்படக் கூடியதல்ல என்றும் அவர் கூறினார்.

எவ்வாறாயினும் தனியார் வங்கிகளிலிருந்து பெறப்பட்ட மேற்படி கடன் மூன்று வருடத்திற்கும் ஐந்து வருடத்திற்கும் இடையில் வட்டியுடன் திருப்பிச் செலுத்தக்கூடிய ஒப்பந்தமொன்றுடனேயே பெறப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

யுத்த செலவினங்களைக் குறைத்துக் கொள்ளவும் சில மானியங்களைத் தொடர்ந்து வழங்கவும் ஐரோப்பிய நாடுகளின் தனியார் வங்கிகளிலிருந்து மேலும் பல கடன்களைப் பெறத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கள் உற்பத்தி பாதிக்கப்பட்டதால் கசிப்புப் பாவனை அதிகரிப்பு!

வடமராட்சி, டிசெ. 4

யாழ். குடாநாட்டில் கசிப்பு உற்பத்தியும், விற்பனையும் அதிகரித்துள்ளது.

பனங்கள் சீசன் முடிவுற்றதையடுத்துப் பனங்கள்ளுக்குப் பெரும் பற்றாக்குறையும், தட்டுப்பாடும் நிலவி வருகிறது. காய்வெட்டி முறை மூலம் சீவப்படும் பனங்கள் ஒரு சில இடங்களில் மட்டுமே விற்பனைக்கு வருகின்றன.

காய்வெட்டி முறை மூலம் சீவப்படும் கள் ஒரு போத்தல் பதினெட்டு ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இதேவேளை—

தென்னங் கள்ளின் உற்பத்தியும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. தென்னமரங்கள் மிக அதிகமாக உள்ள தென்மராட்சிப் பகுதியில் வசித்து வந்த சீவல் தொழிலாளர்கள் இடம்பெயர்ந்துள்ளதால் தென்னங்கள் உற்பத்தியும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் கசிப்பு உற்பத்தியும், பாவனையும் அதிகரித்துள்ளதாச் சுட்டிக்காட்டப்படுகிறது.

(ஐ-173)

# நூலக உதவியாளர்கள் 12 பேருக்கு பதவி உயர்வு

தென்மராட்சி, டிசெ. 4

வடக்கு — கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றப் பொது நூல் நிலையங்களில் நூலக உதவியாளர்களாகக் கடமையாற்றுவோருக்கு கடந்த வருடம் நடத்தப்பட்ட நூலகர் தரம் III க்கான பரீட்சையில் சித்திபெற்ற யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 12 பேருக்கு நியமனக்கடிதங்கள் வடக்கு— கிழக்கு மாகாண பிரதம செயலாளரினால் அனுப்பப்பட்டுள்ளன. இவர்களுக்கு டிசெம்பர் முதலாம் திகதி முதல் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி நகரசபை பொதுநூல் நிலையத்தில் நூலக உதவியாளர்களாக கடமையாற்றிய பொ. இரவீந்திரன், பூ. வைகுந்தவாசன் ஆகியோர் நூலகர் தரம் IIIக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

பொ. இரவீந்திரன் வவுனியா நகரசபை பொது நூல் நிலையத்துக்கும் கு. வைகுந்தவாசன் சுன்னாகம் பிரதேச சபை பொது நூல் நிலையத்துக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை —

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை பொதுநூல் நிலையத்தில் நூலக உதவியாளராகக் கடமையாற்றிய திருமதி அன்னமுத்து தர்மகுலசிங்கம் சாவகச்சேரி நகரசபை பொது நூல் நிலையத்துக்கு நூலகர் தரம் III நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ-117)

# ஆய்வு கூடத்துக்கு அடிக்கல்

காரைநகர், டிசெ. 4

காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியில் புதிய விஞ்ஞான ஆய்வு கூடம் ஒன்று அமைப்பதற்கான அடிக்கல் நடும் வைபவம் கடந்த வியாழக்கிழமை கல்லூரி அதிபர் ந. பரமசிவம் தலைமையில்நடைபெற்றது.

யாழ். கல்வித் திணைக்கள பிரதம பொறியியலாளர் எஸ். சிவபாலன் கட்டடத்திற்கான அடிக்கல்லை நட்டார்.

கல்வி அமைச்சினால் இந்த ஆய்வு கூடத்தை நவீன வசதிகளுடன் அமைப்பதற்கு 8 லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது (ஐ—73)

# சிறுவர் விளையாட்டு முற்றம்

காரைநகர், டிசெ. 4

காரைநகர் வியாவில் சைவ வித்தியாலயத்தில் சிறுவர் விளையாட்டு முற்றம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிறுவர் முற்றத்தை அமைப்பதற்கு பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டில் இருந்து 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டதாக வித்தியாலய அதிபர் அ. குமரேசமூர்த்தி தெரிவித்தார்.


அநேக மாணவரின் வேண்டுகோளுக்கிணங்க

புத்தூரில்!

**குருபரன் கல்வி நிறுவனம்**

**A|L Day Class 2001**

கலை, வர்த்தகப்பிரிவு

அளவையியல் T. மோகன்

பொருளியல் S. ஜெயக்குமார்

இ. நாகரிகம் T. ஸ்ரீஸ்

கணக்கீடு P. கணேஸ்

தமிழ் T. ரமணி

வணிகக் கல்வி S. கிருபா

புவியியல் S. கிரி

ஆரம்பம்:- 11.12.2000 திங்கள் காலை 9.00 மணி.

★ புதிய கல்வியாண்டு 2001 இற்கான வகுப்புக்கள் தரம்3தொடக்கம் O/L வரை.

ஆரம்பம்:- 06.12.2000 புதன் பி. ப. 4.00 மணி.

- நிர்வாகி

(81814)


# கண்சிகிச்சைப் பிரிவுக்கு நவீன உபகரணம் கிடைக்கும்

## சர்வதேச லயன்ஸ் கழகம் உதவி

யாழ்ப்பாணம், டிசெ. 4

யாழ் போதனா வைத்தியசாலை கண் சிகிச்சைப் பிரிவுக்கு சர்வதேச லயன்ஸ் கழகம் நவீன கண் சத்திர சிகிச்சை உபகரணங்களை வழங்கி உள்ளது.

40 லட்சம் ரூபா பெறுமதியான இந்த உபகரணங்கள் விரைவில் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட இருப்பதாக லயன்ஸ் மாவட்டத் தலைவர் எஸ் எஸ். அருளானந்தம் தெரிவித்தார்.

நீரிழிவு விழிப்புணர்வு மாதத்தை ஒட்டி நல்லூர் லயன்ஸ் கழகம் அண்மையில் நடத்திய இலவச மருத்துவ முகாமில் உரையாற்றிய போதே அவர் இத் தகவலை வெளியிட்டார்.

கண் சத்திர சிகிச்சையை மேற்கொள்வதற்கு இந்த உபகரணங்கள் பெரிதும் உதவும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-111)

# பதுளை சிறையில் தமிழ் இளைஞர் தாக்கப்பட்டு சிகிச்சைக்கு அனுமதி

கொழும்பு, டிசெ. 4

தலவாக்கொலையில் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்களையடுத்து கைது செய்யப்பட்டு பதுளை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர் ஒருவர் சிறைச்சாலையில் வைத்து தாக்கப்பட்ட நிலையில் பதுளை தள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

வட்டகொடையைச் சேர்ந்த பழனியாண்டி யோகேஸ்வரன் என்ற இளைஞரே இவ்வாறு தாக்கப்பட்டவர். இவரது உடம்பில் பல இடங்களில் காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் இவர் நடக்கச் சிரமப்படும் நிலையிலே இருப்பதாகவும் தெரிகிறது.

சிறைச்சாலையினுள் வைத்து தமிழ்க் கைதியொருவர் தாக்கப்பட்டுள்ளமை குறித்து இ. தொ. கா வின் முன்னாள் எம். பி. ஆர். யோகராஜன் நீதியமைச்சர் பட்டி வீரக்கோனுக்கு அறிவித்துள்ளார். அமைச்சரிடம் இவ்விடயம் பற்றிக் கேட்டபோது தான் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு இது சம்பந்தமான உரிய பணிப்புரைகளை விடுத்துள்ளதாகக் கூறினார். (ஐ)

# ஆலயங்களின் விவரங்கள் சேகரிப்பு

கொழும்புத்துறை, டிசெ. 4

கொழும்பு அகில இலங்கை இந்து மாமன்றம் சேதமடைந்த சகல இந்து ஆலயங்களின் விவரங்களையும் சேகரித்து வருகிறது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற அனர்த்தங்களால் சேதமடைந்திருக்கும் ஆலயங்களின் விவரங்களையும், அவை திருத்தப்பட்டிருந்தால் திருத்தம் செய்யப்பட்ட விவரங்களையும், இன்னும் திருத்தப்படாமலிருந்தால் திருத்தம் செய்யப்பட வேண்டிய விவரங்களையும் தகுந்த ஆதாரங்களுடன் கூடிய விரைவில் அனுப்பி வைக்குமாறு ஆலயபரிபாலன சபையினர்களிடம் கோரப்பட்டுள்ளது.

விவரங்களை 'கந்தையா-நீலகண்டன், பொதுச் செயலாளர்' 91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு - 2. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது (ஐ-30)

# குளவி கொட்டி வயோதிப மாது மரணம்

குளவியினால் கடியுண்ட வயோதிப மாது ஒருவர் ஆஸ்பத்திரியில் மரணமானார்.

அல்வாய் தெற்குப் புதுக்குளங்கரையைச் சேர்ந்த தியாகராசா-கனகம்மா (வயது 85) என்பவரே செவ்வாய்க்கிழமை காலை குளவியினால் கடியுண்டு மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மறுநாள் அங்கு மரணமானார்.

(ஐ 109)

# விபத்தில் காயம்

நெல்லியடி, டிசெ. 4

இராணுவ டிரக் — சைக்கிள் விபத்தில் டாக்டர் ஒருவர் தலையில் படுகாயம் அடைந்தார்.

இச் சம்பவம் நேற்றுக் காலை 10 மணியளவில் அல்வாய் மாலுசந்திக்கு அருகில் இடம்பெற்றது.

சங்கத்தானையிலிருந்து இடம்பெயர்ந்து கரவெட்டியில் வசித்து வரும் ஓய்வு பெற்ற டாக்டரான பொன்னம்பலம் சிவபாதசுந்தரம் (வயது 80) என்பவரே, தலையில் காயமடைந்து மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஐ—109)


# 4 ஆம் ஆண்டு நினைவுப் பூக்கள்

வளர்மதிக்காய் மண்ணில் 1937.07.16



வளர்மதியைப்பிரிந்து விண்ணில் 1996.12.04

**அமரர் பொன். நாகமணி**

(ஸ்தாபகர், வளர்மதி சனசமூக நிலையம்)

வளர்மதிக்கு வித்திட்ட நன்மணியே
வளர்மதி வானுயர உழைத்தவரே
வளர்மதிக்கு வான்புகழ் ஈட்டியவரே
வளர்மதி மக்களுக்கு வழிகாட்டியவரே
வளர்மதி மண்ணின் முத்தே
வளர்மதிக்கு இசையால் புகழீட்டியவரே
வளர்மதியின் கல்விக்கு வித்திட்டவரே
வளர்மதி பெற்றிட்ட மாமனிதரே
வளர்மதி உச்சரிக்கின்றது உன் நாமம்
வளர்மதி உனைப் பிரிந்து நான்காண்டாகியும்.

வளர்மதி சனசமூக நிலையம்
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

(81209)



# கண்ணீர் அஞ்சலி

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட
நடராசா வித்தியாசாலை முன்னாள்
உதவி ஆசிரியையும்,
ஓய்வுபெற்ற புளியங்கூடல் நெசவு நிலைய
ஆசிரியையும், புளியங்கூடல் கிராம
மாதர் முன்னேற்றச் சங்கத் தலைவியும்,
கிராம நிகழ்வுகளில் முன்னின்று உழைத்தவருமாகிய

**திருமதி மகேந்திரன் சீதாலெட்சுமி**

அவர்கள் 01-12-2000 அன்று சிவபதமடைந்தசெய்தி கேட்டுத் துயருறுவதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கிராம முன்னேற்றச் சங்கம்,
புளியங்கூடல்.

(81215)

# வீரப்பனைத் தேடும் பணியில் எல்லைப்படை

பெங்களூர், டிசெ. 4

சந்தனமரக்கடத்தல்காரன் விரப்பனைத் தேடும் பணியில் முதல் முறையாக மத்திய அரசின் எல்லைக்காவல் படையினர் ஈடுபடுகின்றனர்.

கர்நாடக முதல்வர் எஸ். எம். கிருஷ்ணாவின் வேண்டுகோளின்படி மத்திய அரசு நவீன ஆயுதங்களுடன் அனுப்பிவைத்த ஆயிரம் எல்லைப் பாதுகாப்புப் படையினர் மற்றும் 2 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழக, கர்நாடக சிறப்புப் படையினர் இணைந்து வீரப்பனைத் தேடிக் காட்டுக்குள் நுழைந்துள்ளனர்.

# காஷ்மீர்ப் பிரச்சினை தொடர்பாக வாஜ்பாய் - முஷாரப் சந்திப்புக்கு அமெரிக்கா மறைமுகமாக ஏற்பாடு

காஷ்மீர்ப் பிரச்சினை தொடர்பாக இந்தியப் பிரதமர் வாஜ்பாயும் பாகிஸ்தானின் பர்வோஸ் முஷாரப்பும் சந்தித்துப் பேச அமெரிக்கா மறைமுகமாக ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

பாகிஸ்தானைப் பூர்விகமாகக் கொண்ட—தற்போது அமெரிக்காவில் வசிக்கும் — மொன்சூர் இஜாக் என்ற வர்த்தகர் இரு பிரதமர்களின் சந்திப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகக் கூறப்படுகிறது. அமெரிக்க அதிபர் பில்கிளின்ரனின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் என்று கருதப்படும் இஜாக் சமீபத்தில் துபாய் நாட்டுப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தனது முயற்சி குறித்து சூசகமாகத் தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை இந்தியா தற்காலிகமாக நிறுத்தியுள்ளதை பாகிஸ்தானிய அதிபர் செம்மையாக எதிர்கொள்வார் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதே சமயம்—

பாகிஸ்தானிய வெளியுறவுத் துறைச் செயலர் இனாமுல்ஹக், காஷ்மீர் எல்லையில் அதிகபட்ச கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்ளும்படி பாகிஸ்தானியப் படைகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

இந்திய அரசின் ஒரு தரப்பான தாக்குதல் நிறுத்த அறிவிப்பை ஆரம்பத்தில் ஏற்றுக் கொள்ளாத முக்கிய தீவிரவாத அமைப்பான ஹிஸ்புல் முஜாஹிதீன்கள், இந்திய அரசின் அறிவிப்பை தாம் முற்றாக நிராகரித்துவிடவில்லை என்று தற்போது அறிவித்துள்ளனர்.

இவற்றைக் கவனத்தில் எடுத்துக்கொண்டுள்ள அவதானிகள் அமெரிக்க அரசு அதிகாரபூர்வமாக ஈடுபடாதபோதும், அதன் தூண்டுதலின் பேரிலேயே மொன்சூர் இஜாக் பேச்சுவார்த்தைக்கான முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகக்கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் காஷ்மீர்தீவிரவாத இயக்கங்களின் கூட்டமைப்பான குரியத் மாநாடு கட்சியினர் இந்தியப் பிரதமர் மற்றும் பாகிஸ்தான் ஆட்சியாளர் ஆகியோர் பங்குபற்றும் அமைதிப் பேச்சு றம்ழான் பண்டிகையை அடுத்து சில தினங்களில் ஆரம்பிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கின்றனர்.

(ஒ-7-6)

# இஸ்ரேல் பலஸ்தீன ஒப்பந்தம்

டெல்அவி டிசெ, 4

அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் பதவியில் இருந்து விலகும் சமயத்தில் பலஸ்தீனருடனான சமாதான உடன்படிக்கை சாத்தியமாகும் என்று இஸ்ரேலிய நீதி அமைச்சர் ஜாஸ் எட்வின் கூறியுள்ளார்,

அடுத்த ஆண்டு 20 ஆம் திகதி கிளின்ரன் பதவி விலக உள்ளார்.

அந்தக் காலப் பகுதியில் பலஸ்தீன, இஸ்ரேல் தரப்புகளிடையே உடன்பாடு ஏற்படும் என்று நம்புவதாக எல்வின் மேலும் தெரிவித்தார்.

# பாகிஸ்தானில் புதை படிவம்

இஸ்லாமாபாத், டிசெ. 4

பாகிஸ்தானில் டைனசோர்களின் புதை படிவங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன

சுமார் 70மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்ததாகக் கருதப்படும் டைனசோர்களின் புதை படிவங்கள் பாகிஸ்தானில் அதிகளவில் கண்டு பிடிக்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும்.

இவற்றின் மூலம் டைனசோர்களின் இடம்பெயர்வு மற்றும் தெற்காசிய பகுதியின் மாற்றங்கள் குறித்து புதிய தகவல்கள் கிடைக்கக் கூடும்.

# விண்வெளி நிலையத்தில் புதிய சாதனம்

விண்வெளி ஓடம் 'எண்டகர்' விண்ணில் மிதக்கும் சர்வதேச விண்வெளி நிலையமான 'அல்பா'வுடன் வெற்றிகரமாக இணைந்துள்ளது.

இதனையடுத்து சூரிய சக்தி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் இரு சாதனங்களை விண்வெளி நிலையத்தில் பொருத்தும் பணியில் விண்வெளி வீரர்கள் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

# சிங்கப்பூரில் விதி நீக்கம்

சிங்கப்பூர் சிற்றி, டிசெ. 4

சிங்கப்பூரில் எய்ட்ஸ் நோயால் இறப்பவர்களை 24 மணி நேரத்தில் அடக்கமோ அல்லது தகனமோ செய்யவேண்டும் என்று விதிக்கப்பட்டிருந்த விதி நீக்கப்பட்டுள்ளது.

இனிமேல் எய்ட்ஸ் நோயால் இறப்பவர்களது சடலங்களை 3நாள்கள் வரை வைத்திருக்க முடியும்.

எய்ட்ஸ் குறித்து தெளிவான சிந்தனை கிட்டாத 80களின் நடுப்பகுதியில் கொண்டுவரப்பட்ட விதியே தற்போது நீக்கப்பட்டுள்ளது.

# ரயில் விபத்துக்குள்ளானதில் இந்தியாவில் 43 பயணிகள் பலி!

இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் தடம்புரண்ட ரயில்மீது பயணிகள் ரயில் மோதிக் கவிழ்ந்ததில் 43 பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

கச்ட்டேகர்சாஹிப் மாவட்டத்தில் ராஜ்புரா மற்றும் சர்கார்த் ரயில் நிலையங்களிடையே, லூதியானாவில் இருந்து அம்பாலாவுக்குச் சென்றுகொண்டிருந்த சரக்கு ரயில் தடம்புரண்டது.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற சிறிது நேரத்தில் இதே தடத்தில் அமிர்தசரஸ்-கௌரா பயணிகள் ரயில் கடந்தபோது தடம் புரண்டிருந்த சரக்கு ரயில் பெட்டிகள் மீது மோதி பயணிகள் ரயில் கவிழ்ந்தது.

ரயில் பெட்டிகள் சில மோசமாகச் சேதமடைந்திருப்பதாகவும் அவற்றுக்குள் பலர் சிக்கியிருக்கலாம் என்றும் மீட்புப் பணி அதிகாரி ஒருவர் அச்சம் தெரிவித்தார்.

அதனால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று கூறப்படுகின்றது. [ஒ-8]

# மரபணு மூலம் நோய் பரவுவதை தடுப்பதில் மருத்துவர்கள் வெற்றி

சிசிலி, டிசெ. 4

மரபணு மூலம் பெற்றோரிடம் இருந்து நோய் குழந்தைக்குக் கடத்தப்படுவதைத் தடுக்கும் முயற்சியில் இத்தாலிய மருத்துவ நிபுணர்கள் வெற்றி கண்டுள்ளனர்.

நோயெதிர்ப்புச்சக்தி காரணமான 'ஹீமோகுளோபின்' குறைவதால் ஏற்படும் நோயால் பாதிக்கப்பட்டிருந்த பெற்றோரிடமிருந்து பெறப்பட்ட கருக்களில் மேற்படி நோய் தவிர்க்கப்பட்ட கருவைத் தெரிவு செய்து அதனை தாயின் கர்ப்பப்பைக்குள் மருத்துவர்கள் பதித்தனர். அந்தக் கருவினால் தாய் இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளார். பிறந்த இரு பெண் குழந்தைகளும் ஆரோக்கியமாக ஹீமோகுளோபின் குறைபாடு இல்லாமல் உள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

மத்தியதரைக் கடல் பகுதி வம்சாவளியினர் ஹீமோகுளோபின் குறைபாட்டால் பாதிக்கப்படுவது அதிகம். அவர்களில் 10 சதவீதத்தினர் 40 வயதுக்குள் இறக்கின்றனர். இத்தாலியில் 20 லட்சம் பேர் இந்த நோயால் பீடிக்கப்பட்டுள்ளனர். (ஒ-7-6)

# சீனாவில் கட்டடம் இடிந்ததில் 100 பேர் வரை பலி என அச்சம்

பெய்ஜிங், டிசெ. 4

சீனாவில் கடைத்தொகுதி ஒன்று இடிந்து விழுந்ததில் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கி 100 பேர் வரை இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

கிழக்குச் சீனாவில் கட்டடத் தொகுதி ஒன்றில் நகர நிர்வாகசபையின் விதிமுறைகளை மீறி கடைகள் கட்டப்பட்டு வந்தன. புதியபகுதியைக் கட்டும் பணிகள் இடம்பெற்றபோது பழைய கட்டடப் பகுதியில் ஏராளமான மக்கள் நடமாடிக் கொண்டிருந்தனர். திடீரென்று கட்டடத்தொகுதி விரிசல் ஏற்பட்டு இடிந்து விழுந்தது.

இதில் 8 பேர்மட்டுமே உயிரிழந்ததாக நகர நிர்வாகிகள் அறிவித்துள்ளனர்.

ஆனால் இடிபாடுகளுள் சிக்கியவர்களின் எண்ணிக்கை நூறுக்கும் அதிகம் என்றும் —

அவர்களில் பெரும்பாலானோர் உயிரிழந்திருக்கக் கூடும் என்றும்.

விபத்தை நேரில்கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

(ஒ-6-7)

# மிஸ்-ஆசிய-பசிபிக் விருதை இந்திய அழகி வென்றார்

## மூன்று பட்டங்களுடன் இந்தியா சாதனை

புதுடில்லி, டிசெ. 4

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் நடைபெற்ற ஆசிய-பசிபிக் அழகுராணிப் போட்டியில் இந்தியாவைச் சேர்ந்த தியாமிர்தா 'மிஸ்-ஆசியா-பசிபிக்' பட்டத்தை வென்றுள்ளார்.

ஒரே ஆண்டில் சர்வதேச ரீதியாக நடத்தப்படும் 3 அழகு ராணிப் போட்டிகளிலும் இந்திய அழகிகள் பட்டம் வென்று சாதனைபடைத்துள்ளனர்.

'மிஸ்-ஆசியா-பசிபிக்' பட்டம் வென்றுள்ள 18வயதான தியாமிர்தா ஆந்திராமாநிலம் ஹைதராபாத்தைச் சேர்ந்த மாணவி ஆவார். 3 ஆண்டுகளின்முன்னர் 'மிஸ்வேர்ல்ட்' அழகிப் பட்டம் வென்ற டயானா ஹைடனும் ஹைதராபாத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் இந்திய அழகி லாரா தத்தா 'மிஸ்யூனிவேர்ஸ்' பட்டத்தையும்—

சில தினங்களின் முன்னர் மற்றொரு இந்திய அழகி பிரியங்கா சோப்ரா 'மிஸ்—வேர்ல்ட்' பட்டத்தையும் பெற்றிருந்தனர். தற்போது இந்திய அழகியான தியாமிர்தா அழகிப் பட்டம்வென்றுள்ளார்.

இந்த ஆண்டு உலக அழகிப்போட்டிகளில் மதிப்புமிக்கவையாகக் கருதப்படும் 3 போட்டிகளிலும் இந்திய அழகிகளே வென்றுள்ளனர்.

முந்தைய ஆண்டுகளில் இந்திய அழகிகளான சுஸ்மிதா சென், ஐஸ்வரியாராய், டயனாஹைடன், மற்றும் யுக்தாமுகே ஆகியோர் உலக அழகிப்போட்டிகளில் பட்டம் வென்றுள்ளனர்.

(ஒ-7-6)

உலக அரங்கில்

# ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி சாதனை

சிட்னி, டிசெ. 4

12 கிரிக்கெட் டெஸ்ட் போட்டிகளில் தொடர்ந்து வெற்றி பெற்று ஆஸ்திரேலிய அணி சாதனை புரிந்துள்ளது.

நேற்று மேற்கிந்தியத் தீவுகள் அணியை ஓர் இன்னிங்ஸ் மற்றும் 27 ஓட்டங்களினால் டெஸ்ட் போட்டியில் வென்று இந்தச் சாதனையை ஆஸ்திரேலியா படைத்தது.

தொடர்ந்து 11 போட்டிகளில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வென்றதே முன்னர் சாதனையாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

# குளோனிங் முறையில் கோழிக்குஞ்சு

'டோலி' என்ற ஆட்டுக்குட்டியை குளோனிங் முறை மூலம் உருவாக்கிய விஞ்ஞானிகள் தற்போது கோழிக்குஞ்சு ஒன்றை குளோனிங் மூலம் உருவாக்கியுள்ளனர்.

இந்தக் கோழியினம் வருடத்துக்கு சுமார் 250 முட்டைகள் இடும். இந்த முட்டைகளிலிருந்து புற்றுநோய் எதிர்ப்பு மருந்தை உருவாக்க முடியும் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

கருவில் இருந்து உயிரினங்கள் பிறக்கும் நடைமுறையிலிருந்து மாறி உயிரியை ஒரு மரபணுவில் இருந்து உருவாக்குவதே குளோனிங் முறையாகும். (ஒ)

# 'எய்ட்ஸ்' நோயால் பீடிக்கப்பட்ட தாயும், ஒருமாதக் குழந்தையும் மும்பையில் உயிருடன் எரிப்பு!

## கொடூரச் சம்பவம்

மும்பை, டிசெ. 4

இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில் 'எய்ட்ஸ்' நோயால் பீடிக்கப்பட்ட தாயும், அவரது ஒருமாதக் குழந்தையும் உயிரோடு எரிக்கப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இந்தக் கொடூரச் சம்பவம் குறித்துக் கூறப்படுவதாவது:-

மும்பை அருகில் உள்ள மீனவக் கிராமத்தைச் சேர்ந்தவர் புஷ்பா. இவருக்கு 1 மாதத்துக்கு முன்னர் ஆண் குழந்தை பிறந்தது. பிரசவ சமயத்தில் செய்யப்பட்ட பரிசோதனைகளில் புஷ்பா 'எய்ட்ஸ்' நோயால் பீடிக்கப்பட்டிருப்பது தெரியவந்தது.

சோதனை முடிவு சமீபத்தில் புஷ்பாவின் குடும்பத்தினருக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து புஷ்பாவின் குடும்பத்தினர், பிறந்து 1 மாதமே ஆன குழந்தையையும், புஷ்பாவையும் ஒரு பெரிய பொலித்தீன் பையினுள் அடைத்தனர். நள்ளிரவில் அருகில் வசித்த ஆசிரியர் ஒருவரின் உதவியுடன் அனைவரும் சேர்ந்து புஷ்பாவையும் குழந்தையையும் உயிரோடு கதறக்கதற எரித்துக் கொன்றனர்.

புஷ்பாவின் மரண ஓலம் கிராமத்தவருக்கும் கேட்டபோதிலும் எய்ட்ஸ் நோயாளி ஒழிக்கப்படுவது சரியானதே என்ற எண்ணத்தில் அவர்கள் அமைதியாக இருந்துள்ளனர். (ஒ)

# பல்கலை மாணவர் பேரணிக்கு வேறு சக்திகள் பின்னணியாம்!

## ஈ.பி.டி.பியின் யாழ்.எம்.பி. ஜெகன் கூறுகின்றார்

யாழ்ப்பாணம்,டிசெ.4

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் என்ற போர்வையில் அண்மையில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஏதோ ஒரு சக்தியின் பின்னணியில் நடத்தப்பட்டது. இதனை பல்கலைக்கழக மாணவர்கள் செய்யவில்லை என்பது எமக்கு நன்றாகவே தெரியும்.

- இவ்வாறு ஈ.பி.டி.பி.யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் வீ.கே.குகேந்திரன் (ஜெகன்) தெரிவித்துள்ளார்.

ஈ.பி.டி.பி.யாழ்.தலைமைச் செயலகத்தில் கடற்றொழிலாளர் அமைப்புகளுடன் நடத்திய கலந்துரையாடல் ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அந்தக் கலந்துரையாடலின் போது அவர் மேலும் கூறியதாவது:-

எமது கட்சிக்கும் பத்திரிகையாளர் நிமலராஜன் கொலைக்கும் எதுவித தொடர்பும் கிடையாது. நாங்கள் ஏனைய தமிழ்க் கட்சிகள் போல ஆயுதங்களுடன் அலையவில்லை; மக்களிடம் வரி வசூலிக்கவில்லை; கொலைகளைச் செய்யவில்லை; ஏனையவர்கள் போல் தேர்தல் மோசடிகளிலும் ஈடுபடவில்லை.

நாங்கள் மக்களின் பிரதிநிதிகள்; மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்கள். எமக்கு எவர் மீதும் சந்தேகம் இல்லை. எவருடனும் பிரச்சினையும் இல்லை. தற்பொழுது அரசு - புலிகள் பேச்சுக்கள் நடைபெறப் போவதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்தப் பேச்சு வார்த்தைகளின்போது என்ன நடக்கப்போகிறது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலின் முடிவுகள் ஈ.பி.டி.பி.யினரான எம்மைப் பொறுத்தவரை பெருந்தோல்வியாகவே அமைந்துள்ளது.

நாம் குடாநாட்டில் மேற்கொண்ட வேலைத்திட்டங்களுடன் ஒப்பிடும் போது இந்த முடிவுகளை தோல்வியாகவே கருத வேண்டியுள்ளது.

கடந்த தேர்தலுக்கு முன்பும் பின்பும் எமது கட்சி உங்களுடன் தான் இருக்கின்றது. எமது அனைத்து வேலைத்திட்டங்களும் மக்களாகிய உங்களைச் சென்றடைந்துள்ளன.

இத்துடன் ஒப்பிடும் போது இந்த தேர்தல் முடிவுகள் எமக்குத் தோல்வியாகவே அமைந்துள்ளன. இதற்காக நீங்கள் எமக்கு வாக்குப் போடவில்லையே என்று தர்க்கப்பட முடியாது. அதனை நாம் விரும்பவும் இல்லை. வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்காக நாம் செயற்படத் தயாராக இருக்கின்றோம்.

எமது தலைவருடன் கட்சியின் மத்திய குழு கூடி ஆராய்ந்தது. அதன்படி இரண்டு முக்கிய காரணங்களுக்காகவே எமது தலைவர் அமைசசுப் பதவியைப் பொறுப்பேற்றார்.

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்த்து வைக்கவும், இது தொடர்பாக ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தி உரிய நடவடிக்கை எடுக்கவும் வேண்டும் என்ற நோக்கத்துடனும் -

எரிந்து கொண்டிருக்கின்ற எமது தேசத்தில் அரசினால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுத் திட்டத்தை அரசுடன் இணைந்து நடைமுறைப்படுத்தி மக்களுக்கு இயல்பு வாழ்க்கையைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புடனுமே அமைச்சுப் பதவியை நாம் பொறுப்பேற்றுக் கொண்டோம்.

கடந்த நாடாளுமன்ற கூட்டத் தொடரின் காலத்தில் நானும் எமது தலைவரும் கடற்றொழில் பிரதி அமைச்சரைச் சந்தித்து உரையாடினோம். குடாநாட்டிலுள்ள கடற்றொழிலாளரின் பிரச்சினைகளை அவருக்கு எடுத்துக்கூறினோம் - என்றார். (உ-5-6)

### மறவன்புலோ மாணவருக்கு!

யாழ்ப்பாணம்,டிசெ.4

மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தில் கல்வி கற்று - தற்போது இடம் பெயர்ந்துள்ள- ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் நாளை மறுதினம் புதன்கிழமை மருதனார் மடத்தில் இயங்கும் வலயக்கல்வி அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன.

பரீட்சார்த்திகள் தேசிய அடையாள அட்டை அல்லது அஞ்சல் அடையாள அட்டையைச் சமர்ப்பித்து தமக்குரிய அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என பாடசாலை அதிபர் ச.ஞானலிங்கம் அறிவித்துள்ளார். இதேவேளை மேற்படி வித்தியாலயத்தில் கல்விகற்று தற்பொழுது வேறு பாடசாலைகளில் கல்வி கற்கும் தரம் 9 மாணவர்கள் இந்த வருடத் திற்கான பாடசாலை மட்டக் கணிப்பீட்டுப்புள்ளிகளை தாம் தற்பொழுது கல்வி கற்கும் பாடசாலை அதிபரின் சிபார்சுடன் நாளைமறுதினம புதன்கிழமை மருதனார்மடம் வலயக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்குமபடியும் அதிபர் கேட்டுள்ளார்.

### இரு மீனவரை காணவில்லை

கொழும்பு,டிசெ.4

வவுனியா மாவட்டத்தில் மாமடுவ நீர்த்தேக்கத்தில் மீன் பிடிக்கச் சென்ற இரு மீனவர்களை கடந்த வெள்ளிக்கிழமை முதல் காணவில்லை என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இந்த மீனவர்களைத் தேடும் பணியில் ஈடுபட்ட படையினர் அவர்களது மீன்பிடி உபகரணங்களை மட்டும் மீட்டுள்ளனர் என்றும் -

பிரஸ்தாப மீனவர்கள் விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டிருக்கலாம் அல்லது கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்றும் -

தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (உ-3)

### மணி ஒலிக்க இன்னும் அனுமதி இல்லை

கோப்பாய்,டிசெ.4

மாவீரர் தினம் முடிந்த பின்பும் கோப்பாய்ப் பகுதியில் ஆலய மணிகளை அடிப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

இப்பகுதியில் ஆலய மணிகளை அடிப்பதை மறு அறிவித்தல் வரை நிறுத்துமாறு கடந்த இருபது தினங்களுக்கு முன்னர் படையினர் அறிவித்திருந்தனர்.

மாவீரர் தினம் அண்மிப்பதால் பாதுகாப்பு முன்னேற்பாடாக இவ்வறிவித்தல் இருக்கலாம் என ஊகிக்கப்பட்ட போதும் மாவீரர் தினம் முடிந்து ஆறு நாள்கள் கடந்த பின்பும் இப்பகுதியில் ஆலய மணி அடிக்க அனுமதி வழங்கப்படவில்லை.


தற்போது ஆலய மணி ஒலிக்காமலேயே அங்கு பூஜைகள் நடைபெற்று வருகின்றன. (இ-72)



இந்திய அழகி ஒருவர் மீண்டும் உலக அழகியாகத் தெரிவாகி உள்ளார்.

லண்டன் மிலேனியம் அரங்கில் நடைபெற்ற உலகஅழகி தெரிவில் 94 அழகிகளை வென்று 18 வயதான பிரியங்கா சோப்ரா உலக அழகியாகக் கிரீடம் சூடிக் கொண்டபின் எடுக்கப்பட்ட படம் இது.

உலக அழகியாகத் தெரிவாகும் ஐந்தாவது இந்திய அழகி இவராவார். இவருக்கு முன்னர் ஐஸ்வர்யாராய், சுஷ்மிதாசென், யுத்தா முகி, லாரா தத்தா ஆகியோர் உலக அழகிகளாகத் தெரிவாகி உள்ளனர்.(ம)



கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு பகுதிகளில் அண்மைக் காலத்தில் திருடப்பட்ட பல பொருள்களை கோப்பாய் பொலீஸார் மீட்டுள்ளனர்.

இப்பகுதிகளிலுள்ள வீடுகளிலும் பொது இடங்களிலும் தொடர்ச்சியாகப் பல திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வந்தன.

திருடர்களால் திருடப்பட்ட சைக்கிள்கள், ரீ.வி, டெக், கஸற் றேடியோ மற்றும் நீரிறைக்கும் இயந்திரம் போன்ற பொருள்களையே பொலீஸார் மீட்டுள்ளனர். மீட்கப்பட்ட பொருள்கள் கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்த போது எடுக்கப்பட்ட படம் இது. (ஐ)

## 15 வயதுக்குட்பட்டோர் கிரிக்கெட்: யாழ்.மாவட்ட அணியில் இடம்பெறும் வீரர்கள்

யாழ்ப்பாணம், டிசெ.4

கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஏற்பாட்டில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள மாவட்ட அணிகளுக்கிடையில் விரைவில் நடத்தப்படவுள்ள 15 வயதுக்கு உட்பட்டோருக்கான - கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் யாழ். மாவட்ட அணி தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

அணியில் இடம்பெறுவோர் விவரம் வருமாறு:-

விமலநாதன் றஜீவ்குமார், சந்திரநாதன் மதுஷன், ஞானேந்திரன் செல்வன் லொயிட், மகேஸ்வரன் விஷ்ணுகாந்த், கணேசலிங்கம் றோகான்.

விஜயராஜா சத்திய பிரசன்னா, தோமஸ் கிறிஸ்ரி அன்ரூ, விஜயகுமார் கரன்ஜீவ், ராஜநாயகம் மதூஷன், இலங்கநாதன் ஐங்கரன்.

போல்டன் கென்ரன், சுசேந்திரராஜா பேபி தர்சன், தவகுலரட்ணம் மதனராஜ், கேமச்சந்திரா கிறிஸ்ண சந்திரா, பஞ்சேந்திரன் கவன்கர்,

ஆறுமுகம் பிரசாந்தன், ஜே.ராஜ்குமார், பி.டினேஷ்.

கடந்த வருடம் நடத்தப்பட்ட மேற்படி சுற்றுப் போட்டியில் யாழ். மாவட்ட அணி முதலாம் இடத்தைப் பெற்றிருந்தது தெரிந்ததே. (உ-7)

## குருநகர், பாஷையூர் மக்கள் மீளக்குடியமர்தல் குறித்து நேற்றுக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்.டிசெ.4

குருநகர், பாஷையூர் மற்றும் கொழும்புத்துறை, அரியாலைப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்துள்ள பொதுமக்களை மீண்டும் அவர்களின சொந்த இடங்களில் குடியமர்த்துவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ்.நகரில் உள்ள 51 ஆவது படையணியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் 51 ஆவது படையணியின் தளபதி மேஜர் ஜெனரல் காமினி ஜெயசுந்தர மற்றும் இராணுவ, கடற்படை அதிகாரிகள், ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளரும், எம்.பியுமான கே.வி.குகேந்திரன் (ஜெகன்), ஈ.பி.டி.பி. வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளரும், வலி.மேற்குப் பிரதேச சபையின் தலைவருமான ந. திரிலோகநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்.கடல் நீரேரிப் பகுதியில் மீன் பிடிக்க அனுமதிக்கப்படும் நேரத்தை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்-

தொழில் நுட்பக் கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் நன்மை கருதி கலட்டிச் சந்தியினூடாக பஸ் சேவையை ஆரம்பிக்க வேண்டியமை குறித்தும்-

எம்.பி.குகேந்திரன் இராணுவ அதிகாரிகளிடம் எடுத்துக் கூறினார்.

இதேவேளை நாளைமறுதினம் புதன்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.நகரில் உள்ள 512 ஆவது பிரிகேட் அலுவலகத்தில் குருநகர், பாஷையூர் மற்றும் கொழும்புத் துறைப் பகுதி மீனவர் சங்கப் பிரதிநிதிகளையும், அரியாலையிலிருந்து இடம்பெயர்ந்தோரின் நலன் காக்கும் குழுவினரையும் இராணுவ அதிகாரிகள் சந்தித்துப் பேச்சு நடத்த உள்ளனர் எனவும் -

இந்தச் சந்திப்பில் கலந்து கொள்வதற்கு வசதியாக அதற்கு அழைக்கப்பட்டவர்களை புதன் காலை 8 மணிக்கு ஈ.பி.டி.பி.யின் யாழ் மாவட்ட தலைமை அலுவலகத்தில் ஒன்று கூடுமாறும்- கே.வி.குகேந்திரன் எம்.பி. கேட்டுள்ளார். (உ-7)

### கரம் போட்டிகள்

கிறிஸ்மஸ் - புதுவருட தினங்களை முன்னிட்டு யாழ்ப்பாணம் கச்சேரியடியில் உள்ள புளூறிபன் ஸ்தாபனத்தின் ஆதரவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆண்களுக்கான ஒற்றையர், இரட்டையர் கரம் போட்டிகள் எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாக இருக்கின்றன.

அணி ஒழுங்குத் தெரிவுகள் 7 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும் என நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.(உ-11)

### சமாதானத்துக்கான சுவரொட்டிப்போட்டி

யாழ்ப்பாணம்,டிசெ.4

யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏயினால் சமாதானத்துக்கான சுவரொட்டிப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

சமாதானத்தை வலியுறுத்தும் வகையில் இந்தச் சுவரொட்டிகள் அமைய வேண்டும் என்று வை.எம்.சி.ஏ. செயலாளர் தெரிவித்துள்ளார்.

டிசெம்பர் 10ஆம் திகதிக்கு முன்னர் இந்த சுவரொட்டிகளை அனுப்பி வைக்குமாறு போட்டியாளர்கள் கேட்கப்படுகின்றனர். (உ-5)


ராஜா யாழ்ப்பாணம்

விஜய், சிம்ரன், மணிவண்ணன் மற்றும் பலரின் நடிப்பில் இனிய பாடல்கள் கொண்ட

துள்ளாத மனமும் துள்ளும்

காட்சிகள்:10.30, 2.00 (பு.நே.)

6.12.2000 முதல் வாலி

நாகம்ஸ சினிமா கன்னாகம்

விஜய், ஜோதிகா நடித்த S.J.சூர்யாவின்

குஷி

(81180)

தினசரி - 11.00, 2.30 (பு.நே.)


## மரண அறிவித்தல்கள்

### இளையதம்பி பொன்னுத்துரை

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த இளையதம்பி பொன்னுத்துரை அவர்கள் நேற்று (03-12-2000) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கம்மாவின் கணவரும் காலஞ்சென்ற இளையதம்பி - தெய்வானை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் திருமதி இராஜேஸ்வரி (தச்சன்தோப்பு), திருமதி கமலநாயகி (இந்தியா), செல்வராசா (துரை கராஜ், நீர்வேலி), தனபாலசிங்கம் (கனடா), கோணேஸ்வரி (வவுனியா), பாலசுப்பிரமணியம் (சுவிஸ்), இராசேந்திரம் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் கந்தையா, தர்மலிங்கம், திலகவதி, யசோ, ஜீவதாசன், நித்தியகலா, கஜானி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04-12-2000) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் நீர்வேலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்

பொ. செல்வராசா (மகன்)
(துரை கராஜ்) நீர்வேலிச் சந்தி.

*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.* (81227)

### ஆறுமுகம் தெய்வானைப்பிள்ளை

கீரிமலையைப் பிறப்பிடமாகவும், வடலியடைப்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தெய்வானைப்பிள்ளை நேற்று (03-12-2000) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ஆறுமுகம் - சின்னம்மாவின் அன்பு மகளும் சுப்பிரமணியம் (காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை), இராசமலர், காலஞ்சென்ற பேபி, வயிரவநாதன் (லண்டன்), பார்வதி (லண்டன்), திருநாவுக்கரசு (லங்கா சிமெந்து லிமிட்டட்), நவரத்தினம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சின்னத்தம்பி (C.T.B) யின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04-12-2000) திங்கட்கிழமை வடலியடைப்பில் நடைபெற்று பூதவுடல் 12 மணியளவில் விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-

சகோதரர்கள்

*சங்கானை மேற்கு,*
*வடலியடைப்பு.* (81228)

## தொழில்நுட்ப....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவனை இன்று யாழ்.நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதாக அவர் தம்மிடம் உறுதி கூறியதாகவும் -

சேனாதிராசா மாணவர்களிடம் மேலும் தெரிவித்தார்.

அவ்வாறு விடுவிக்கப்படாவிட்டால கொழும்பில் இராணுவத்தளபதி லயனல் பலகல்லவுடன் கலந்துரையாடி அவரை விடுவிக்க தாம் நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதி கூறியுள்ளார்.

அதேசமயம் - வகுப்பு பகிஷ்கரிப்பு இன்றும் தொடரும் என்றும் - பிரஸ்தாப மாணவன் இன்று விடுவிக்கப்படாவிட்டால் நாளை குடா நாடு தழுவிய வகையில் பாடசாலை மாணவர் பகிஷ்கரிப்பு இடம்பெறும் என்றும் -

தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்கள் தெரிவித்தனர். (உ-3-139)

அறிவொளி - NALLUR
A/L 2001 க்கான துரித மீட்டல் வினா விடை வகுப்புகள்
ஆரம்பம்: 05.12.2K (4.00 p.m)
PHY. : திரு. ஸ்பெல்மன்
BIO. : திரு.E.சுரேந்திரநாதன B.Sc
CHE. : திரு.K. Bratly B.Sc. (Hons)
C.MAT: திரு.B.ரவீந்திரன B.Sc.
(81226)

இன்று ஆரம்பம்!
A/L 2001 DAY CLASS
(வர்த்தகப் பிரிவு)
காலை 8.00 மணி
D.M.I
யாழ்நகர்
(81216)

## லண்டன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகின.

விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவரான அமரர் புலேந்திரனின் மகன் உரையாற்றினார். அவரது உரை மிகவும் உணர்ச்சியூட்டுவதாக அமைந்தது.

இந்த நிலையில் திடீரென தமது பாரியார் சகிதம் அன்ரன் பாலசிங்கம் மேடைக்கு வந்தார்.

அவர் பற்றிய அறிமுக உரையை புலிகளின் லண்டன் பொறுப்பாளர் சாந்தன் நிகழ்த்தினார்.

மண்டபத்தில் நிகழ்ச்சிகள் ஒரு புறம் நடந்துகொண்டிருக்க -

மண்டபத்துக்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த மாவீரர் துயிலும் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த மாவீரர்களின் உருவப்படங்களுக்கு மக்கள் வரிசையில் நின்று மலரஞ்சலி செலுத்தினர்.

அதேநேரம் மண்டபத்தில் பத்து நிதியேற்பு மையங்களும் இயங்கின.

பங்குகொண்ட மக்கள் சங்கிலி, காப்பு, மோதிரம், தோடு, கைச்சங்கிலி போன்றவற்றைத் தாமாகவே அன்பளிப்புச் செய்து தமிழீழப் போராட்டத்துக்கு தமது பங்களிப்பை வழங்கினர்.

பலர் 5 ஆயிரம், 10 ஆயிரம் பவுண் என நிதி உதவிகளையும் வாரி வழங்கினர். (உ-3)

ஐடியல் கல்வி நிலையம்
நீர்வேலி
புதிய நேரசூசியுடன்
ஒழுங்கமைக்கப்பட்ட முறையில்.
அனுமதிக்கு முந்துங்கள்!
புதிய வகுப்புகள் ஆரம்பம்:-
06.12.2000 - 4.00 p.m
A/L 2000 Paper Class
ஆரம்பம்: 07.12.2000
4.00 p.m.
(C/14133) -நிர்வாகி.

# சமாதானத் திட்ட அட்டவணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நம்பிக்கை தரும் நடவடிக்கைகளை மாறிமாறி - ஒவ்வொரு கட்டமாக - இரு தரப்பினரும் மேற்கொள்வதன் மூலம் சுமுக நிலையை ஏற்படுத்தலாம் என நோர்வே கருதுகின்றது.

இதன்படி -

முதல் நல்லெண்ண நடவடிக்கையை அரசுத் தரப்பு எடுக்க வேண்டும். பதிலாக - உடனடியாக - புலிகளும் தமது தரப்பு நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் நடவடிக்கையை செயற்படுத்த வேண்டும். இப்படி மாறிமாறி நல்லெண்ண நடவடிக்கைகள் எடுக்கப்படுவதன் மூலம் சமாதானச் சூழ்நிலையை எட்டலாம் என்று கருதும் நோர்வே, இரு தரப்பிலும் எடுக்கப்பட வேண்டிய நல்லெண்ண நடவடிக்கைகளையும் அட்டவணைப் படுத்தியுள்ளது.

இதன் பூர்வாங்கக் கட்டத்தை- சர்வதேச ரீதியில் சமாதானம், நல்லெண்ணம் ஆகியவற்றுக்குரிய பருவகாலம் என்று கருதப்படும் கிறிஸ்மஸ்-புதுவருட காலத்தில் - மேற்கொள்ள அரசு, புலிகள் மற்றும் நோர்வே ஆகிய முத்தரப்பும் விரும்புகின்றன.

எனினும் அதற்கான அட்டவணையை இறுதியாக்குவதில் தொடர்ந்து இழுபறி நிலவுகின்றது.

இத்திட்டப்படி -

வடக்கு - கிழக்கு மீதான சகல பொருளாதாரத் தடைகளையும் உடனடியாக முற்றாக நீக்கி, அப்பகுதிகளுக்கு அத்தியாவசியப் பொருள்கள் தட்டுப்பாடின்றி விநியோகிக்கப்படுவதை ஒரு குறுகிய காலத்துக்குள்ளேயே அரசு உறுதி செய்யவேண்டும்.

பதிலாக புலிகள் தமது காவலில் இருக்கும் பொலீஸார் மற்றும் படையினரை விடுவித்து, தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று சமாதானத் திட்டம் கூறுகின்றது.

ஆனால், புலிகளின் தரப்பிலிருந்து மேற்கொள்ளப்படும் நல்லெண்ணத்தைக் காட்டும் பதில் செயற்பாடு, வேறு விதமாக அமையவேண்டும் என்று அரசு கோருகின்றது.

தம்மிடம் கைதியாகவுள்ள படையினரை விடுவிப்பதற்குப் பதிலாக-

வடக்கு - கிழக்குக்கு வெளியே கொழும்பு உட்பட ஏனைய ஏழு மாகாணங்களிலும் அரசியல் தலைவர்கள், பிரமுகர்கள் மீதான தமது இலக்குகளையும் தாக்குதல்களையும் கைவிட உறுதியளிப்பதே புலிகள் தரப்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய முதல் நல்லெண்ண நடவடிக்கையாக இருக்க வேண்டும் என்று அரசு வற்புறுத்துகிறது.

அதாவது - புலிகளின் பாதுகாப்பிலுள்ள படையினரை விடுவிப்பதைக் காட்டிலும், அரசியல் தலைவர்களின பாதுகாப்புக்கு உத்தரவாதம் பெறுவதையே முன்னுரிமை விடயமாக அரசுத் தரப்பு முன்வைக்கின்றது.

ஆனால் எடுத்தவுடன் அத்தகைய உறுதிமொழியை வழங்கப் புலிகள் தயார் இல்லை என்று கூறப்படுகின்றது.

தமிழீழத் தாயகம் மீது அரசுத் தரப்பு பெரும் தாக்குதல் - இராணுவக் கெடுபிடி - நடவடிக்கைகளைத் தொடரும்போது சிங்களவரின் தாயகத்தில் அத்தகைய தாக்குதலை நடத்தமாட்டோம் என்று உறுதியளிக்கும்படி புலிகளின் கையைக் கட்டிப்போடும் விதத்தில் கோருவது ஒருதலைப்பட்சமானது; நியாயமற்றது என்று தெரிவித்து, அதற்கு இணங்க புலிகள் மறுத்து வருகின்றனர்.

அத்தோடு, மோதல் தவிர்ப்பு விடயத்தை பிரதேச அடிப்படையில் நேரத்துடனேயே நடைமுறைப்படுத்த எடுக்கும் முயற்சி இது என்றும் புலிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இரண்டாவது இழுபறி விவகாரம், மோதல் தவிர்ப்பு சம்பந்தமானது.

ஏதோ ஒரு கட்டத்தில் மோதல் தவிர்ப்பு முழுமையாக நடைமுறைக்கு வரவேண்டும் என்றும் -

அத்தகைய தீர்க்கமான ஒரு கட்டத்திலேயே அர்த்தமுள்ள பேச்சுக்கள முன்னெடுக்கப்பட முடியும் என்றும் -

புலிகள் தரப்புக் கூறுகின்றது.

ஆனால் ஒருபுறம் போரைத் தொடர்ந்துகொண்டு மறுபுறத்தில் ஒஸ்லோ, லண்டன், பிரஸ்ஸல்ஸ், பரிஸ், ஜெனிவா போன்ற ஏதேனும் ஒரு இடத்தில் சமாதானத் தீர்வு கிட்டும் வரை பேச்சைத் தொடரலாம் என்று அரசுத் தரப்புக் கூறுகின்றது.

இது விடயத்தில் தீர்க்கமான ஆலோசனையையோ பதிலையோ கூறாமல் நோர்வே மௌனம் சாதித்து வருவதாகக் கூறப்படுகின்றது.(உ-3)

## கடத்தப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தித்துறையில் வைத்து விடுவிக்கப்பட்டனர்.

இந்தக் கடத்தல் தொடர்பாக இவர்களது உறவினர்கள் பொலஸார் மற்றும் இராணுவத்துடன் தொடர்பு கொண்டபோது இச்சம்பவம் குறித்துத் தங்களுக்கு எதுவும் தெரியாது என்று அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. மூன்று இளைஞர்களின் கடத்தலுக்கும் முடிவு சொல்லவேண்டுமெனக் கோரி நேற்றுமுன்தின மாலை 6 மணியளவில் வடமராட்சிப பகுதி மக்கள் தும்பளை மணியகாரன் சந்திக்கு அருகிலுள்ள படை முகாமுக்கு முன்பாக ஒன்று திரண்டு தமது ஆட்சேபனையைத் தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து அங்கு வந்த படை அதிகாரிகள் இச்சம்பவம் குறித்துக் காலையில் முடிவு சொல்லுவதாகவும் மக்களைக் கலைந்து செல்லுமாறும் கோரினார்கள்.

கடத்திச் செல்லப்பட்டு விடுவிக்கப்பட்ட இருவரும் இது குறித்துக் கூறியதாவது :-

ஏழுபேர் கொண்ட ஆயுதம் ஏந்திய நபர்கள் எம்மைக் கடத்திச் சென்று கண்களைக்கட்டி அறை ஒன்றில் பூட்டி வைத்து, 'புலிகளுக்கு உதவி செய்வீர்களா?' என்று கேட்டுத் தாக்கினார்கள்.

சிவில் உடையில் காணப்பட்ட இவர்கள் சுத்தத்தமிழில் கதைத்தனர். இடையிடையே சிங்களத்திலும் கதைத்தனர் - என்று தெரிவித்தனர்.

விடுவிக்கப்பட்ட அஜந்தன் என்ற இளைஞன் அணிந்திருந்த தங்கச் சங்கிலி, மோதிரம் என்பவற்றை இக் கடத்தல்காரர்கள் கழற்றி எடுத்துள்ளதாகக் கூறப்பட்டது.

இவர்களுடன் கடத்தப்பட்ட மற்றைய இளைஞனுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. (உ-5)

இன்றைய வீடியோ CD வெளியீடு
அழகே உன்னை காதலிக்கிறேன்
(பிரதிகளை உடன் பெற்றுக் கொள்ளலாம்)
மூர்த்தி வீடியோ
மானிப்பாய்
(C/14132)

BITSMANS
கல்வி நிறுவனம், மானிப்பாய்
A/L 2000
மீட்டல்
✲ தமிழ். இந். நாகரிகம் ✲
N.பாலா
ஆரம்பம்: இன்று (4.12.2000)
திங்கள் 2.00 p.m (81181)

சரவணபவன் ஆபரண மாளிகை
சாவகச்சேரி பிரதான வீதியில் நடைபெற்று வந்த மேற்படி எமது நகை வியாபார ஸ்தாபனம் தற்போது நெல்லியடி, மாலு சந்தி, பருத்தித்துறை வீதியில் "ரமிலாஸ்" தொலைத்தொடர்பு நிலையம் இருந்த கட்டடத்தில் செயற்பட்டு வருகின்றதென்பதை எமது வாடிக்கையாளருக்கு அறியத் தருகின்றோம்.
கே.கே.யோகநாதன்
(உரிமையாளர்)
(81141)

NEW SCIENCE COLLEGE
கன்னாதிட்டி
PHYSICS - A/L
திரு. குகன் B.Sc.
✲ மின்னியல் ✲
WED. - THU. - 4.00 - 5.00
அலகு ரீதியான மீட்டல் வினா விடை வகுப்பு
✲ பொறியியல் ✲
WED. - THU. - 5.00 - 6.00
ஆரம்பம்: 06.12.2000 புதன் (81175)

G.C.E. (A/L) - 2000
பெறுபேறு மீளாய்வுப் படிவம்
2000-12-01 திகதிய அரச அறிவித்தலுக்கு அமைய அச்சிடப்பட்டுள்ளது. இன்று (04.12.2000) நண்பகல் முதல் விற்பனைக்கு வருகின்றது.
விண்ணப்ப முடிவு திகதி:
2000-12-15
பாரதி பதிப்பகம்,
430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(C/14127)

ஐடியல் அக்கடமி
சண்டிலிப்பாய்
A/L 2001 DAY CLASS
கலை, வர்த்தகப் பிரிவுகள்.
ஆரம்பம்: இன்று 2000.12.04
காலை 8.00 மணி
எமது வழமையான
ஆசிரியர் குழு
(C/14129) -நிர்வாகி-

அறிவகம்
அச்சுவேலி
புதிய கல்வியாண்டு - 2001
தரம் 7 - 11
வரையான வகுப்புகள்
ஆரம்பம்: 06.12.2K
புதன் பி.ப.3.30
மாணவர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டதால் முன் கூட்டியே அனுமதியைப் பெற்றுக் கொள்ளவும்.
(80896)

IIS இன் கணனிக்கற்கைநெறிகளுக்கான
மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2001
5000 மாணவர்களுக்கு

பல்கலைக்கழக, தொழில்நுட்பக்கல்லூரி, பாடசாலை மாணவர்களுக்கு ஏற்றவகையில் நன்கு திட்டமிடப்பட்ட பாடவிதானங்களைக் கொண்டது.
இப் புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாகும் ஓர் அரிய சந்தர்ப்பம்.
ஆசிரியர்கள், அலுவலகர்களின் தேவைக்கேற்ப வடிவமைக்கப்பட்ட பயிற்சிநெறிகளைக் கொண்டது.
விண்ணப்பப்படிவங்களை திங்கள் IIS அலுவலகங்களிலும், உங்கள் பாடசாலைகளிலும், பிரபல தனியார் கல்வி நிறுவனங்களிலும், அருகில் உள்ள பிரபல புத்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுத்திகதி 24/12/2000 வரை நீடிக்கப்பட்டுள்ளது
வருடம் ஒரு முறை மட்டுமே கிடைக்கும் இவ் அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்
"IIS உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி"
Institute of Informatics Studies (IIS)

விண்ணப்பித்து விட்டீர்களா ?
DCS
5000 புலமைப்பரிசில் திட்டத்திற்கு !
விண்ணப்பப்படிவங்களை குடாநாட்டிலுள்ள சகல பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

கணனி உதிரிப்பாகங்கள்

எமது IIS விற்பனைப் பிரிவில் அனைத்து விதமான கணனி உதிரிப்பாகங்களையும் நியாயமான விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
முக்கிய குறிப்பு:
அரச, தனியார் நிறுவனங்கள் நிறுவனரீதியாக தொடர்பு கொண்டால் விசேட விலைக் குறைப்புடன் பெற்றுக்கொள்ளலாம்.
கணனி உதிரிப்பாகங்களை விற்பனை செய்யும் நிறுவனங்கள் மொத்தமாக கொள்வனவு செய்தால் விசேட கழிவு வழங்கப்படும்.
உங்கள் தேவைகளுக்கு எங்கள் முகவரி
IIS SALES UNIT,
100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 2831

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.12.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.